1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது
Telegrams: "CATHOLIC PRESS", JAFFNA.
Telephone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

80-ம் புத்தகம் || யாழ்ப்பாணம் 1955-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 8-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 || 35-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

மழைக்கோலம் அதிகமாகக்காணப்படினுமமழையில்லை. பல குளங்கள் முற்றுகவற்றி வாண்டுபோய்க் கிடக்கின்றன. வெளிப்பானநேரங்களில் வெயில் அகோரமாய் எறிக்கின்றது இடையிடையே முன்போல ஓர்வித குளிர் காற்று உரமாக வீசிக்கொண்டிருக்கிறது.

### மோட்டர்ரத விபத்து

வேலணைமேற்கைச்சேர்ந்த ஓர்கடற்தொழிலாளியான கே. சித்திரம்என்பவர் சென்ற 3-ந்திகதியன்று இரவு பண்ணைப் பாலத்துக்கருகில் கார்ஒன்றினுல் மோதுண்டு படுகாயங்களுடன் யாழ்ப்பாண அரசினர்ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்பட்டுச் சிலமணி நேரத்தின்பின் அங்கேஇறந்துபோயினுர். காரின்சாரதியான செல்லப்பா இராசையா பொலிஸ்காவலில் வைக்கப்பட்டிருக்கிறுர்.

### விபத்துமரணங்களும் கொலைகளும்

இவ்வருடத்திலே இதுவரை இலங்கைவீதிகளில் ஏற்பட்டவிபத்துகளால 205 பேர் இறந்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதேகாலத்தில் இலங்கைமுழுவதிலும் 373 கொலைகள் நிகழ்ந்திருக்கின்றன. அதனுல் விபத்துகள், கொலைகளால் மொத்தமாகஏற்பட்டுள்ள மரணங்கள் 578.

### நால்வருக்கு மரணதண்டனை

மாத்தறையைச்சேர்ந்த தியகாமா எனுங்கிராமத்திலே ஒருவருக்கொருவர் இனத்தவர்களான வி. பி. எட்வின் (வயது 25), எச். ஏ. பீற்றர் (28), வை. ஏ. பிரமதாசா (20), எச். ஏ. கிறிகோரின் (18) எனும் வாலிபர்கள் நால்வர்சேர்ந்து கே. பி. பஸ்ரியன் (32) என்பவனைச் சென்றதைமாதம் 10-ந்திகதியன்று வாள்களாலும், கத்திகளாலும் வெட்டிக்கொலைசெய்தார்களென்று தொடரப்பட்டிருந்தவழக்கு மாத்தறைச் சுப்பிறீங்கோட்டிலே பதுத்தினங்களாக விசாரணைசெய்யப்பெற்று முடிவில் எதிரிகள்நால்வருமே கொலைக்குற்றவாளிகளாகிச் சென்ற வெள்ளிக்கிழமை மரணதண்டனை விதிக்கப்பட்டார்கள். கொலையுண்ட பஸ்ரியன் மதுபரிபாலன உத்தியோகஸ்தர்களுக்குத்தகவல் கொடுத்ததின் பேரிலே அவர்கள் முதலாமஎதிரியின் சகோதாஞன புஞ்சாஎபவனுல் களவிலே நடத்தப்பட்ட கள்ளுத்தவறணையை வளைந்து பரிசோதனை நடத்திஞர்கள். அதனுல் குறித்த அன்றிரவு எதிரிகள் நால்வரும் பஸ்தியனைவழிமறித்துத்தாக்கினுர்கள். முந்திய இருவரும் வாள்கள் கொண்டும், பிந்திய இருவரும கூரிய முனையுள்ளகத்திகள் கொண்டும் அவனைத் தாக்கிக்கொலைசெய்தார்கள். மரணதண்டனை விதிக்கப்பட்டபோது அவர்களின் தாய்மாரும், இனசனரும் அழுதுகூச்சலிட்டமையால் கோட்டுவிசாரணை சிறிதுவேளை நிறுத்திவைக்கப்படலாயிற்று.

### கொலைநடந்த மறுநாள்

மாத்தறையைச்சேர்ந்த உனல்லா எனுங்கிராமத்திலே ஜி. பியதாசா எனும்ஒருவன் 35வயதுடைய ஜி. ஜூலியஸ் என்பவனை ஓர்காணிப்பிணக்கில் ஏற்பட்ட சண்டைகாரணமாகச் சென்றவெள்ளியன்று ஓர்கத்திகொண்டு வெட்டிக்கொன்றுவிட்டான். கொலைநிகழ்ந்த இடத்தில் அன்றுதினமே நீதிபதிவிசாரணை நடத்திஞர். மறுநாள் எதிரியைக் கோட்டிலேநிறுத்திச் சிலவாக்குமூலங்கள் கேட்டெழுதப்பட்டபின் இந்தக்கொலைவழக்கு அன்றுதானே சுப்பிறீங்கோட்டுக்குப் பாரப்படுத்தப்படலாயிற்று.

### மூன்று காவல்முகாங்கள்

களவிலேவந்து குடியேறியவர்களென்று சொல்லப்படும் இந்தியர்கள் குடியேற்ற—வெளியேற்ற சட்டத்தின்படி விசாரணைசெய்யப் படுகிறவரையிலே அவர்களைக் காவலில்வைப்பதற்கெனத் தலைமன்ஞரில் இரண்டும், ஊர்காவற்றுறையில் ஒன்றுமாக மூன்று காவல்முகாங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

### கரும்புச் செய்கை

கல்லோயாப் பள்ளத்தாக்கின் இருபக்கங்களிலுமுள்ள பதினுயிரம்ஏக்கர் நிலத்திலே கரும்புத்தடிகளை நடும் விஷயமாய்க் கல்லோயா அபிவிர்த்திச்சபை தற்போது ஆலோசித்துவருகின்றது. அதற்குக்காரணம், விருத்திபெற்றுவரும் சீனிக்கைத்தொழிலுக்குப்போதிய கரும்புஉதவுவதேயாகும்.

### சபாநாயகரின் கவலை

மாருவிலிலே சமீபத்தில் சுதேச புடவை நெசவுதொழிலை விருத்திசெய்யும்நோக்கமாக நடைபெற்ற கூட்டம் ஒன்றிலே புடவைகளை எடுத்துக்காட்டிப் பிரசாரஞ்செய்த பெண்மணிகள் பிறநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட சேலைகளைத் தரித்திருந்ததைக்கவனித்த சனப்பிரதிநிதிகள்சபையின் சபாநாயகரான சேர் அல்பேட் பீரிஸ்அவர்கள் பெரிதும் கவலைதெரிவித்துக்கொண்டார். அவ்வேளை அவர் பேசியபோது: சுதேசபுடவை நெசவுதொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் சுதேசபுடவைகளையே அபிமானித்து நாட்டுக்கு நன்முன்மாதிரி காண்பிக்க வேண்டும; எனதுமுன்மாதிரிகையைப் பின்பற்றுமாறு மற்றவர்களை ஊக்கப்படுத்தவேண்டி, நானுமே சுவதேசி உடைகளை அணிந்திருக்கிறேன்; ஆயினும் தங்கள்ஐரோப்பிய உடைகளையெல்லாம் சுட்டெரித்துவிட்டு, உள்நாட்டில் நெசவுசெய்த புடவைகள் கொண்டு தயாரித்த தேசியஉடைகளையே அணியத்தொடங்க வேண்டுமென்று நான் சனங்களைக் கேட்கப் போவதில்லை; இன்றையஉலகில் அத்தகைய ஓர்நடவடிக்கைஎடுப்பது முற்றுமே இயலாக்கருமமாகும்; என்றுஞம் சனங்கள் தேசியஎண்ணங்கொண்டு, தங்கள்தேசிய கலாச்சாரத்துக்குப் புத்துயிர்அளிக்கவிரும்பினல் படிப்படியாக இந்த உடைமாற்றம் சாத்தியமாகும்; எந்தஒருகைத்தொழிலினதும் முன்னேற்றம் அதைஉற்பத்திசெய்யும்பொருட்களின் தரத்திலேயே தங்கியிருக்கிறதெனக் கூறலாயினர்.

### யாழ்ப்பாண மத்தியநூல்நிலையம்

யாழ்ப்பாண மத்திய நூல்நிலையத்திற்கென்று சரித்திர, வைத்திய சம்பந்தமும், மற்றும்விஞ்ஞான, கலைசம்பந்தமுமாய்க் கிடைக்கக்கூடிய ஏட்டுச்சுவடிகளையெல்லாம் திரட்டும்முயற்சி ஒன்றை இந்தநூல்நிலைய நிர்வாகசபை நியமித்துள்ள கம்மிற்றிஒன்று ஆரம்பித்திருக்கிறது. டக்றர் ஆனந்தகுமாரசாமியின் நூல்களையெல்லாம் இந்தக் கமமிற்றி விலைக்குவாங்கும். இதற்கென நூல்நிலைய நிதியிலிருந்து 10,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. "சிலோன் நாஷனல் றிவியூ" எனும் ஆங்கிலசஞ்சிகையின் பழையபிரதிகளையும், இலங்கையையும், இலங்கைத்தமிழரையும் பற்றிவெளிவந்த சகலநூல்கள், சஞ்சிகைகள் ஆகியவற்றையும் விலைக்குவாங்கக் கம்மிற்றி தீர்மானித்துள்ளது.

### ஆசிரியமணிப் பட்டம்

—*—

இளவாலைக் கன்னிகாமடத்துத் தமிழாசிரிய கலாசாலை அதிபாரகப் பலவருடகாலம் பெருங்கண்ணியத்துடன் பணியாற்றியவரும், தற்போது கொழும்பு, சஞ்சூசையப்பர் கல்லூரித் தமிழ்ப் பண்டிதராகக் கடமையாற்றி வருகிறவருமான பண்டிதர் வி. ஏ. ஜோண்பிள்ளை அவர்களின் ஆசிரியதொண்டைக் கௌரவித்து அகிலஇலங்கைத் தமிழ்ஆசிரியர் சங்கமானது சென்ற 20-8-55 சனிக்கிழமை அவருக்கு "ஆசிரியமணி"ப் பட்டம்சன்மானித்துப் பொன்னுடை போர்த்தி அவரைப் பெருமைப்படுத்தியிருக்கிறதென அறிந்து சந்தோஷமானேம்.

### றெயில்வே ஜெனறல் மனேஜர்

இலங்கைறெயில்வேயின் தற்காலிக ஜெனறல் மனேஜராய் இருந்துவந்தவரான திரு. ஏ. பி. டெம்மர் அவர்கள் தம்பதவியிலிருந்து இளைப்பாறுவதற்காகச் சென்ற 5-ந்திகதியன்று விடுமுறையிலே சென்றிருக்கின்றுர். இவர் கடந்த 26 வருடங்களாக றெயில்வேப் பகுதியில் உயர்ந்தபதவிகள்வகித்துப் பணியாற்றி வந்திருக்கின்றுர். இவரிடமாகப் புதியஜெனறல் மனேஜராகத் திரு. ரம்பாலா அவர்கள் நியமனஞ் செய்யப் பெற்றுச் சென்றதிங்கட்கிழமை தமதுபதவியைக் கையேற்றிருக்கின்றுர்.

### தேசீயஆஸ்பத்திரிச் சுவீப்

ஆஸ்பத்திரிகளின் லொத்தர்ச்சட்டப்படி நடத்தப்படவிருக்கும் முதலாவது சுவீப்புக்கான திக்கெற்றுகள் சென்ற திங்கட்கிழமைமுதல் விற்கப்படுகின்றன. ஒவ்வொன்றும் 50 சதம் விலையுள்ள இந்தத்திக்கெற்றுகள் இம்மாதம் 15-ந்திகதி வரையிலே விற்பனை செய்யப்படவிருக்கின்றன. சீட்டிழுப்பு கொழும்பு நகரமண்டபத்திலே 17-ந் திகதியன்று இரவு 7 மணிக்குப் பொது சனங்கள்முன்னிலையில் நடைபெறும்.

### தாதிகள் பயிற்சிப் பாடசாலை

225 மாணவிகளுக்குப்போதிய இடவசதியுள்ள நேர்ஸ்மார் பயிற்சிப்பாடசாலைஒன்று காலியிலே வருகிறஐப்பசி மாதம் 1-ந் திகதியன்று திறக்கப்படவிருக்கிறது. இதற்கென அங்குள்ள அரசினர் ஆஸ்பத்திரியோடுஇணைத்துப் புதியகட்டடம்ஒன்று அமைக்கப்படுகின்றது. இதுதிறக்கப்பட்டதும் மூந்த 75 மாணவிகளுடன் பாடசாலைஆரம்பமாகும். அதிலேஇவர்கள் மூன்று வருடப்பயிற்சி அளிக்கப்படுவார்கள். இரண்டாவதுவருடத்தில் மேலும் 150 மாணவிகள் சேர்க்கப்படுவார்கள். மூன்ருவதுவருடத்திலே இப்பாடசாலையில் மொத்தமாக 225 மாணவிகள் இருந்துவருவார்கள்.

### தவறணைகளும் வழிபாட்டுத்தலமும்

சமயவழிபாடு நடைபெறுகின்ற கோவில்கள், பள்ளிவாசல்களுக்குச் சமீபமாகத் தவறணைகள் இருக்கவிடப்படாதென்ற பிரேரணைஒன்று சமீபத்திலே அரசாங்கத்தின் ஆலோசனைக்கு வரவிருக்கிறது. இந்தப் பிரேரணை தொழில்மந்திரியாரான டக்றர் எம். சி. எம். கலீல்அவர்களால் எடுத்தாளப்படவிருக்கிறது. இதற்குக்காரணம், வவுனியாப்பிரிவிலே ஓர்பள்ளிவாசலையடுத்துத் தவறணைஒன்று அமைக்கப்பட்டதையிட்டு டக்றர் கலீல் செய்த ஆட்சேபனையை உள்நாட்டுமந்திரியார் நிராகரித்துவிட்டமையேயாகும்.

### நீதிபதியின் நன்மதி

பத்தொன்பதுவயதுடைய கிரிஷ்னன் பியசேனுஎனும் வாலிபன் கூடுதலாகஇரண்டுபோத்தல்கள்ளுக்கொண்டு சென்றபோது பொலிசாரால் கைதுசெய்யப்பெற்றுக் கொழும்பு மியூனிசிப்பல் கோட்டிலே வழக்குத்தொடரப்பட்டான். விசாரணையின்போது அவன் நீதிபதியைநோக்கி: ஐயா! நான் ஓர் பார்சாலையில் வேலைசெய்கிறேன்; அதில்வேலைசெய்யும் இருதொழிலாளிகளுக்கே இருபோத்தல்களையும் கொண்டுபோனேன் என்றுகூறினுன். நீதிபதி அவனைநோக்கி: நீங்கள் ஓர் பார்சாலையில் வேலைசெய்கிறீர்கள்; நீங்கள்ஏன் பாலைஅதிகமாகக் குடிக்கப்படாதெனக்கூறி அவனுக்கு இருபது ரூபா அபராதம்விதித்தார்.

### அற்பகாரணங்களுக்காக

பத்தேகமத்திலே சென்ற 4-ந்திகதி நடந்தேறிய குற்றஒழிப்பு இயக்ககூட்டம்ஒன்றில், காலிநீதிபதியான திரு. பி. ஜி. எஸ். டேவிட் அவர்கள் பேசியபோது: இப்பகுதியில் இழைக்கப்படுங் குற்றங்கள் மிகஅதிகமாகும்; ஓர்வாழைக்குலைக்காகக் கொலைநடந்த ஓர் இடத்துக்குச்சென்று நான்விசாரணை நடத்தியிருக்கிறேன்; ஒருதேங்காய்க்காகவும் கொலைகள்நடக்கின்றன; அற்பசொற்பஆத்திரத்திலும் கத்தியைஇழுத்தெடுத்துக் குற்றிவிடுகிறுர்கள்; பிறகு கொலையுண்டவர்கள், கொலைசெய்தவர்கள் ஆகிய இருபாலாரினதும் குடும்பங்கள் நடுத்தெருவில்நின்று தவிக்கவேண்டியநிலைமை ஏற்படுகிறது. ஆதலால், நீங்கள் இப்படியான குற்றங்களிலே இறங்குமுன் நன்ருகச் சிந்தித்துப் பார்க்கவேண்டுமெனக் கூறினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது வாழ்வு

( கி. ஞானச்சந்திரன் அவர்கள், சுகாதாரப் பரிசோதகர் )

மக்கள் தோன்றிய நாள்முதல் இன்றுவரை மனிதவர்க்கத்திலும், மாநிலத்திலும் மறக்கமுடியா மாற்றங்கள் நிறைந்திருக்கின்றன. சமூக, சமுதாய, கல்வி, கலாச்சார, விஞ்ஞான, வியாபாரமுறைகளில் மக்கள் மணிக்கொரு மாறுதல்களைக் கண்டுமகிழ்கின்றனர். மானிட சமுதாயமெனும மாபெரும் குடும்பத்தில் ஒவ்வொருமனிதனும் ஒரு அங்கத்தவன். எனவே, அச்சமுதாயம் உய்யவேண்டின், உண்மைத்தியாகிகள், உயிர்த்தோழர்கள், மாபெருந்தலைவர்கள், மதப்பிரசாரகர்கள், தேசியபக்தர்கள், அன்புத்தாய்மார்கள், அணுச்சக்தியையும் பணியவைக்கும் விஞ்ஞான மேதைகள், அஞ்சாநெஞ்சம்படைத்த அறப்போர்வீரர்கள், கலாநிதிகள், கொடைவள்ளல்கள் அத்தியாவசியம். எந்தமனிதனும் மேற்கூறிய ஏதாவதொரு துறையில் முன்னேறி மக்கள்வாழ வழிகாட்டின், அவன் ஈட்டிய வெற்றிக்கு இன்றியமையாதனவாக விளங்கும் ஏதும் இரகசியப்பொருள்கள் உண்டல்லவா? அவைகள்தான் தன்னம்பிக்கை, தளரா முயற்சி, தைரியம்எனச் சுருங்கக்கூறலாம்.

எம்மை வாழ்விக்கவந்த மேதைகள் ஒவ்வொருவருடைய சரித்திரத்தையும் படித்துப்பார்த்தால், அவர்களிடமிருந்து நாம்கண்டு போற்றி வாழ்வதற்கென இருப்பது, அன்னார் கடைப்பிடித்த அருமை இலட்சியங்களேயாம். இவர்கள் உலகின்போக்கையே திருத்தி அமைக்கவில்லையா? உலகின் அத்திவாரத்தையே புனர்நிர்மாணம் செய்யவில்லையா? சமூகத்தைத் தலைதூக்கித் தன்மானத்துடன் வாழவைக்கவில்லையா? இவற்றிற்கெல்லாம் அடிப்படையான உண்மையைஆராய்ந்தால் அனைவரும் இலட்சியபுருடர்கள் என்றே கூறவேண்டும்

போய்ச்சேரவேண்டிய இடத்தை எண்ணாது, கண்மூடித்தனமாகக் கப்பலோட்டும்ஒருவன் தனதுகப்பலை அலைகளுக்கு விளையாட்டுக்கருவியாக்கி, பாறைகளில்மோதவிட்டுக் கப்பலோடு தன்னையும் நாசப்படுத்திக்கொள்வான். அதுபோன்றே இலட்சியம் இல்லா வாழ்க்கையும் ஆகிவிடும். இலட்சியமில்லா வாழ்க்கைக்கு விமோசனங் கிடையாது. ஒருவனை மேன்மைக்கு அழைத்துச்செலலும் ஏணிப்படி அது. அவன சீவநாடியும் அதுவே. "உலக சரித்திரத்தில் காணப்பெறும் பெரும் பெரும் இயக்கங்களெல்லாம் உற்சாகத்தின் வெற்றிச்சின்னங்களே" என்று கூறுகிறார் ஞானி 'எமர்சன்.'

மேலும் இலட்சியபுருடர்களாக வாழ்ந்து, வாழவழிகாட்டிய ஒருசில பெரியாரின் வாழ்க்கைக் குறிப்புகளை இங்குதருதல் பொருந்தும். ஏழைக் குடும்பத்தில்பிறந்த இருபதுவயது நிரம்பா இளைஞன் ஒருவன் தன் குமாஸ்தாவேலையை உதறித்தள்ளிக் கலையுலகில்பிரவேசித்தான், பெரிய எழுத்தாளனாகவேண்டும்என்ற உறுதியானஎண்ணத்தால். அந்த இளைஞன் தான் உலகின்மாபெரும் நாடகாசிரியர் — அறிஞர்க்கறிஞர் — பேனுவன்மையால் பெரும்பொருள்ஈட்டிய பெருமகன்என்றெல்லாம் பேசப்படும் 'பெர்னுட் ஷா'. அமெரிக்காவிலே முதற்தரமான கௌரவபதக்கத்தைத் தந்தை பெற்றபொழுது அதைப் பக்கத்திலே ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டு நின்ற பன்னிரண்டுவயதுச் சிறுவன் தானும்அதைப்போலப் பதக்கத்தைப் பெற வேண்டும்என்ற உணர்ச்சியால் உந்தப்பெற்றான். அச்சிறுவன்தான் ஒருபதக்கமல்ல, எத்தனையோபதக்கங்களைப் பெற்றவனும், இரண்டாவது மகாயுத்தத்தில் ஜப்பானை முறியடித்தவனுமான ஜெனறல் 'மைக்ஆர்தர்'.

அமெரிக்காவைச் சுதந்திரநாடாகச் செய்த ஜோர்ஜ்வாஷிங்டன் ஒருஏழை. அமெரிக்காவில்அடிமைவியாபாரத்தை அடியோடுவேரறுத்த அண்ணல் ஆபிரஹாம் லிங்கன் புத்தகங்களை இரவல் வாங்குவதற்காக வெகுதூரம் நடந்து சென்று அடுப்புவெளிச்சத்தில் தானே படித்து முன்னேறியவர். அமெரிக்க நாடுகளில் உள்நாட்டுக் குழப்பத்தை அடக்கி ஒரு ஐக்கியத்துள் அமெரிக்க நாடுமுழுவதையும் கட்டுப்படச்செய்து இருதடவை அந்நாட்டின் ஜனதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆந்தலிங்கன் ஓர்ஏழை விறகுவெட்டியின் மகன் என்பதை மறந்துவிடக்கூடாது. முடியாட்சியையொழித்துக் குடியாட்சியை நிறுவிய புரட்சித்தலைவர் றூஸோ இளமையில் தாங்கொணுத வறுமையால் தவித்தார். அவரது உறுதியான இலட்சியமே வறுமையை மறக்கச்செய்து வாழ்க்கையில் வெற்றிஈட்டியது. பகவத்கீதையையும், பைபிளையும்படித்துச்சத்தியமே என்வாழ்வின் இலட்சியம்என வாழ்ந்த மோகனதாஸ் காந்திமகாத்மா வென்றும், அகிம்சா மூர்த்தியென்றும், உலக உத்தமர்என்றும் அழைக்கப்படவில்லையா? கோடீஸ்வரரும், கொடைவள்ளலுமான றொக்பெல்லர் ஓர்ஏழைக் குடிசையில் பிறந்தவர். குழந்தைப் பருவத்தில் பணத்தையே பார்த்தறியாதஅவர் முதுமைப்பருவத்தில் முப்பதுகோடிபவுணுக்கு அதிபதியானர்.

அவர் பணத்தைத்தேடியது மட்டுமல்லாமல், பல்லாயிரக்கணக்கில் தருமமும்செய்தார். போலாந்தில் ஒருபணக்காரக்குடும்பத்திற்குக் குற்றேவல்புரியும் வேலைகாரியாகவிருந்து பிற்காலத்தில் உலகம்போற்றும் உத்தமியாகப் பெருமைபெற்று, 1903-ம் ஆண்டு பௌதீக ஆராய்ச்சிக்காகவும், 1911-ம் ஆண்டு இரசாயனஆராய்ச்சிக்காகவும் இருதடவை நோபல்பரிசு பெற்றவர் தான், புற்றுநோயை அகற்றக்கூடிய றேடியத்தைக் கண்டுபிடித்த க்யூரி அம்மையார். எனவே, பெரும்பெரும் போராட்டங்களென்ன? மாபெரும் மதங்களென்ன? அரும்பெரும் புரட்சிகளென்ன? சீர்பெறுங் காவியங்களென்ன? சிறப்புறும் சாத்திரங்களென்ன? இவைகளெல்லாம் இலட்சியத்தில் உறுதிபூண்டு, தளராமுயற்சியுடன் வாழ்ந்த பெருந்தகையாளரின் அரியசாதனைகளே. எனவே, மாணவர்களும், மற்றையோரும் மனிதவர்க்கம் மாண்புறவேண்டின் இன்னோரன்ன பெரியாரின் வரலாறுகளைப் படித்தலுடன்நில்லாது, அவர்கள் கடைப்பிடித்த அரிய இலட்சியங்களைத் தங்கள்கருத்திலே இருத்தித் தாங்களும் ஒவ்வோர் இலட்சியபுருடர்களாக வாழச் சங்கணங்கட்டுவார்களானுல், பேரும்சீரும் பெறுவர். நாடும் ஈடேறும்.

—சதா. வெ. வி. மலர்.

# செபமாலைத் தாசர்சபை

( தமிழாக்கம்: ஆசிரியர், எல். பாக்கியநாதர் )

இந்த லோகாயதயுகத்திலே ஆயிரக் கணக்கானேர் உலக இன்பத்தையே இலக்காகக் கொண்டு உலைகின்றனர். இலக்குத்தவறித் திரியும் இவர்களின் ஈற்றுகதி அதோகதிதான். இவர்கள் அழிவின்பாதையிலே அறியாமைகாரணமாக ஆனந்தமாக நடக்கின்றனர். இந்தக்காலத்திலும் உலகசுகபோகங்களை உதறித்தள்ளித் தங்களைத்தாங்களே தண்டித்துக் கண்டிப்பான வாழ்க்கை வாழும்வீரர்கள் இல்லாமல் இல்லை. இவர்கள் உலகில் சீவித்தாலும் உலகத்திற்காகச் சீவிப்பதில்லை. உடலுடன் சீவித்தாலும் உடலுக்காகச் சீவிப்பதில்லை. உலகையும், உடலையும் எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கின்றனர். தமது இலக்காகிய நித்தியபாக்கியத்தை அடைதற்கு நிச்சயமான வழியைத் தெரிந்துகொண்டிருக்கின்றனர். இவர்கள் தெரிந்துகொண்டவழி கரடுமுரடானது. கஷ்டமானது. ஆனல், நிச்சயமானது. கிட்டியது.

இவர்கள் தெரிந்துகொண்ட நிச்சயமானவழி இரகசியமானதுஅல்ல. எல்லோரும் அறிந்தது, பகிரங்கமானது. இவர்கள் போராடும் யுத்தகளம் அந்தரங்கமானது அல்ல, அம்பலமானது. இவர்களின்வழியில் இவ்வுலக இன்பம் இல்லை. மறுவுலக இன்பமே உண்டு. மலர்களின் நறுமணமோ, சந்தனக்குழம்பின் சுகந்தமோ கிடையாது. செபத்தின் சுகந்தமும், தபத்தின் தூய்மையுமே துலங்கும். பட்டம் பதவிகளின் பரிமளிப்போ, அட்ட ஐசுவரியங்களின் அதிகாரத்திமிரோ இவர்களின் யுத்தகளத்தில் சொலிப்பதில்லை. அடக்கத்தின் அமைதியும், தரித்திரத்தின் தனிமையுமே தெளிவாகக் காணப்படும்

இப்படியான வாழ்க்கை வாழ்பவர் இன்று அநேக இடங்களில் உள்ளனர். எமது அயலிலும் உள்ளனர். எமது தாயகமாகிய யாழ்ப்பாணத்திலே தோலகட்டிஎனும் குக்கிராமத்தில் உள்ளனர். இக்கிராமம் இவர்களினுல் மேம்பாடடைகின்றது. அநேக விரத்தரும், அநேககன்னியரும் தம்மைப் பரிசுத்தராக்கும் பரமகைங்கரியத்தில் அங்கே ஈடுபட்டிருக்கின்றனர். "செபமாலைத் தாசர்" என்னும் இவர்களைப்பற்றிக் கேள்விப்படாதோர் இன்று நமது ஸ்ரீ லங்காவிலே இல்லைஎனலாம். "செபமாலைத்தாசர் சபை" ஏறக்குறைய 25 வருடங்களுக்குமுன் ஸ்தாபிக்கப்பட்டது. செபமாலையே இவர்களது விருது. செபமாலையே இவர்களது கவசம். செபமாலையே இவர்களது ஒப்பற்றசெல்வம். செபமாலை செபிப்பதே இவர்களின் பிரதம ஊழியம். அதைச் செபிப்பதில் இவர்களுக்கு இணையற்ற இன்பம்உண்டு. ஒப்பற்ற திறமையுமுண்டு.

## இச்சபையின் ஆரம்பம்

பரிசுத்தபிதா 11-ம் பத்திநாதர் "றெறும் எக்கிளெசியெ" எனும்பெயருடன்விடுத்த அப்போஸ்தலிக்க நிருபத்தில், வேதபோதகநாடுகளிலே தியானசபைகள் ஏற்படுத்தப்படல் வேண்டும்என்று விண்ணடபஞ் செய்தார். அவ்விண்ணப்பத்திற்கு இயைய அடியிடப்பட்டதே இந்தச்சபை. 1928-ம் ஆண்டு மாசிமாதம் 2-ந் திகதி தேவதாயாரின் சுத்திகரத் திருநாளன்று "செபமாலைத் தாசர்" என்னுஞ் சபையை அதிவ'ண. பி. ஏ. தோமஸ் சுவாமிஅவர்கள், மகாவந். ஜே. ஏ. கியோமார்ஆண்டவர்அவர்களின் அனுமதியுடன் அடியிட்டனர். இச்சபையின் பிறப்பு மிகவும் எளிமையானது. ஆடம்பரமற்றது. ஆயின், மனிதன் விபரிக்க முடியாத வலிமைபொருந்தியது. அது மெல்லமெல்ல வளர்ந்தது. மெல்லமெல்லப் பரந்தது. மெல்ல மெல்ல மக்கள்மனதைக் கவர்ந்தது. இச்சபை பொறுமைஎன்னும் பாறையில் பிறந்து, தாழ்ச்சி எனும் தாயால் பராமரிக்கப்படுகின்றது. ஒறுப்பும், மௌனமும் இதன்பிரதம பாதுகாவலர்.

அன்று ஏழு அங்கத்தவருடன் இச்சபை ஆரம்பமானது. இன்று ஐந்து குருப்பிரசாதிகளும், எழுபதுக்குமேற்பட்ட விரத்தர்களும, நாற்பத்தைந்து கன்னியர்களும் இச்சபையில் உள்ளனர். தோலகட்டியிலே ஸ்தாபிக்கப்பட்ட இச்சபை வடக்கன்குளம் வரையும் வளர்ந்துவிட்டது. தோலகட்டியிலேயே இருமடங்களும், அச்சுவேலியில் ஒன்றும், வடக்கன்குளத்தில் ஒன்றுமாக நான்குமடங்கள் இதுவரை ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இலங்கையில் மாத்திரமல்ல, இந்தியாவிலும் இதன்பெயர் பரந்துள்ளது. இலங்கையரும், இந்தியரும் ஒருங்கிருந்து அவற்றிலே தியானஞ் செய்கின்றனர்.

## இச்சபையின் நோக்கம்

புதுமை வரம் பெற்றிருந்த அப்போஸ்தலர்களை முதலாய் ஊமைப்பிசாசு மதிக்கவில்லை. சுயஞ்சீவியான சர்வேசுரனின் சுதனுனவருக்கே அப்பிசாசு கீழ்ப்படிந்தது. ஏனெனில், "இந்தவகைப் பிசாசு செபத்தினுலும், உபவாசத்தினுலுமேயன்றி வேறெந்தவிதத்திலும் போகாது" (மாற்கு 9:28). அநேக வருடங்களாக அநேககுருமார் ஆரம்பாடுபட்டும், இச்சிறியதீவை ஏன் மனந்திருப்ப முடியவில்லை? என்று கேட்டால் இந்தக்கேள்விக்குரிய விடையைச் "செபமாலைத்தாசர் சபை" யினர் சொல்லுகின்றனர். அமைதியும், நம்பிக்கையும் இன்றிக் கலங்கும்உலகிற்கு அமைதியும், நம்பிக்கையும் உண்டாகுமா? என்று கேட்டாலும் இவர்களே பதில் கூறுகின்றனர். இவர்கள் செபிக்கின்றனர். உபவாசிக்கின்றனர். இதுதான் இவர்களின் விடை. இவர்களின் செபம், இவர்களின் தபம் இவர்களின் இரட்சணியத்திற்கு மாத்திரமல்ல, மற்றவர்களின் இரட்சணியத்திற்கும நிச்சயமானவழி. இவர்கள் தமக்காகவுஞ் செபிக்கின்றனர். நமக்காகவுஞ் செபிக்கின்றனர். ஒருவர் ஒருவருக்காகப் பரித்தியாகஞ்செய்வது என்ற உத்தமபுண்ணியத்தை அனுசரிக்கின்றனர். தேவசெம்மறிப் புருவையானவர் உலகஇரட்சிப்புக்காகப் பட்டபாடுகளுடன் இவர்கள் தங்கள் பாடுகளையும் ஒப்புக் கொடுக்கின்றனர். அவர் உபவாசம் இருந்தார். இவர்களும் உபவாசிக்கின்றனர். அவர்வாய்மூடி மௌனியாய் நின்றார். இவர்களும் மௌனங்காக்கின்றனர்.

(வளரும்)

---

● கோடைகாலத்திலே ஐஸ்கிறீம் அருந்துவது அதிகம் பழையமாதிரியான ஓர் வழக்கமாகும். அநேக நூற்றாண்டுகளுக்குமுன்னே ஐரோப்பியர்கள் பாலையும், கிறீமையும் உறையவைத்து அருந்திவந்தார்கள். அதற்குமுன் றோமைநகர் முளாசி எரிந்து கொண்டிருக்கும்போது வீணைவாசித்து ஆனந்தமாகப் பொழுதுபோக்கிய நீரோ சக்கரவர்த்தி பழரசமும், தேனும், பனியுங்கொண்டுசெய்து உறையவைத்த ஐஸைச்சீம்பிரமமாக அருந்தும் வழக்கமுடையவனுய் இருந்தானும்.

● பர்மாவிலே றங்கூனிலிருந்து அறுபதுமைல்தூரத்தில் நூற்றுக்கு மேற்பட்ட கிராமங்களைச்சேர்ந்த ஒரு லட்சம்ஏக்கர் வி[illegible] மையான நெ[illegible] மழைகாரணமாக வெள்ளத்தில்அமிழ்ந்திப் போயினவென்று செய்திகிடைத்திருக்கிறது. கடந்த ஐம்பதுவருடகாலத்திலே இத்துணைபெரும் மோசமான பெருவெள்ளம் அங்கு ஏற்படவில்லையென்று சொல்லப்படுகிறது.

● இரண்டாவது உலகயுத்தம் முடிவடைந்து பத்துவருடங்கள் சென்றபோதிலும் ருஷியாவிலும், செஞ்சீனுவிலுமுள்ள ஆயிரக்கணக்கான ஜப்பானிய யுத்தகைதிகள் இன்னுமே விடுதலைசெய்யப் படவில்லையென்று ஜப்பானிய அரசாங்கம் முறையீடு செய்துள்ளது. செஞ்சீனுவில் மாத்திரம் ஏழாயிரம் ஜப்பானியர் யுத்தகைதிகளாய் இருந்துவருகின்றனராம். நாற் [illegible]பற்றிய விபரமே [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### பாப்பரசர்கூறும் ஆலோசனை

சுதந்திர நாடுகளும், கம்யூனிஸ்த சர்வாதிகாரநாடுகளும் உடனிருந்து வாழ்வதற்கான இயக்கமொன்றை ஏற்படுத்துதற்கான கிளர்ச்சிகள் சிலகாலமாக எழுந்துள்ளன. அங்ஙனமாக, பரிசுத்த பாப்பரசர் சமீபத்திலே ஜேர்மனிதேச ஒக்ஸ்பேர்க் நகரின் பிறியன்டோபர் மேற்றிராணியாருக்கு எழுதியனுப்பிய திருமுகம்ஒன்றிலே: "கட்டுப்பாடுகள் இல்லாது நாம் அங்கீகரிக்கக்கூடிய ஓர் சிறந்தமாதிரியான உடனிருந்துவாழ்தல இருக்கிறது" எனத் தெரிவித்திருக்கின்றார். இதிலே அவர் கிழக்கிலும் மேற்கிலுமுள்ள கத்தோலிக்கர் செபத்திலே ஒன்றித்து வாழ்வதையே சுட்டிக்காண்பித்துள்ளனர். "தங்கள் கிறீஸ்துவேத விசுவாசத்திலே விடாப்பற்றுள்ளவர்களான மேலைத்தேச மக்களெல்லாம் இரும்புத்திரைக்குப்பின்னால் பெருந்தொகையினராய் இருந்துவருகிறைமக்களுடன் ஒன்றுசேர்ந்து தேவசித்தத்துடன் பூரணமாகஒருமனப்பட்டுத் தங்கள் சொந்த வாழ்க்கையையும், பொதுசனவாழ்க்கையையும் நிர்மாணிப்பதற்குப் பூரண சுதந்திரத்தில் எல்லோரும் ஒன்றாயிருக்கும்படியாகத் தங்கள் செபங்களை ஒப்புக்கொடுக்க வேண்டும்" என்று பரிசுத்த பிதா தமது திருமுகத்தில் மேலும் தெரிவித்திருக்கின்றார். கிறீஸ்துவ ஐரோப்பாவிலே அஞ்ஞான ஹங்கேரிய சாதியினர் படையெடுத்தபோது லெக்பெல்ட் எனுமிடத்தில் நிகழ்ந்த யுத்தத்தின் ஆயிரமாம்ஆண்டு நிறைவின் ஞாபகார்த்தவிழாக் கொண்டாட்டத்தின் போதே அவர் இத்திருமுகத்தை எழுதியனுப்பினர். அவர்களின் படையெடுப்பு 1955-ம்ஆண்டு ஆவணி மாதம் 10-ந் திகதியன்று அதிசயத்துக்குரியவிதமாய் நிறுத்தப்படலாயிற்று.

### குருமாரும் அகராதிகளும்

செஞ்சீனாவின் ஜனாதிபதியான மாவோ-ரிசி-ருங் என்பவரின் வாயிற்படிக்கு நேரே — அதாவது சீனாவிலுள்ள போர்த்துக்கேய கலனியாகிய மக்காவோவிலே 25 யேசுசபைக் குருமார் சஞ்சரித்திருந்து கடந்த நான்குவருடகாலமாகஐந்துவிதமான அகராதிகளைத்தொகுத்துவருகின்றார்கள். அவைகள் சீன-ஆங்கில, சீன-பிரான்சிய, சீன-ஹங்கேரிய, சீன-லத்தீனிய, சீன-ஸ்பானிய அகராதிகளே. சீனக் கம்யூனிஸ்தர்களாலே நாடுகடத்தப்பட்டு அதிகம்அதிகமான யேசுசபைக்குருமார் மக்காவோவில் போய்ச்சேர்ந்தபோது அவற்றைத் தொகுக்கும்வேலை ஆரம்பமாயிற்று. சீனாவிலிருந்து புறப்படும்போது அவர்கள் உலககுடிசனங்களில் காற்பங்குபேர்களாலே பேசப்பட்டுவருகிறசீனப் பாஷையோடு சம்பந்தப்பட்ட பெருந்தொகையான குறிப்புகளைத் தங்களுடன்கொண்டுசென்றார்கள். இவைகளே இந்தஅகராதிகளைத் தயாரிக்கும் கருத்தைப் பிறப்பிக்கலாயிற்று. ஒவ்வோர்அகராதியும் 2,000 பக்கங்களையுடையனவாய், அதுகாரணமாகஇவைகள் தங்கள் இனத்திலே உலகில் அதிகந்தற்கால முறையான அகராதிகளாய் இருந்துவரும். இவற்றைத்தொகுப்பதிலே போர்மோசாவில் இருந்துவருகின்ற சீனக்கத்தோலிக்ககல்விமான்கள் பன்னிருவரும் துணைச்செய்கின்றார்கள். இந்த அகராதிகள் பூர்த்தியடைய இன்னும் இருவருடங்கள்வரையிலே செல்லும். சீனப் பாஷையையும், ஏனையபாஷைகளையும் தொடர்புபடுத்தும் முதல்அகராதிகளைத் தொகுத்தவர்களும் கத்தோலிக்கமிஷனரிமாரே.

### ஆயத்தமாகின்றனர்

ஓர்ஞானோபதேசப் புத்தகம், ஓர் வேதசாஸ்திர சங்கிரகம், அர்ச். பத்தாம் பத்திநாதரின் சீவியவரலாற்றுப் புத்தகம், மெய்விவாகம், திவ்வியநற்கருணைபற்றிய நூல்கள் ஆகியன நியூயோக் நகரிலுள்ள போர்டாம் யேசுசபைச்சர்வகலாசாலையிலே முற்றாக ரூஷியபாஷையிலே பிரசுரஞ்செய்யப் பட்டிருக்கின்றன. இவைகளைப் பிரசுரஞ்செய்தது, அச்சர்வகலாசாலையின் ரூஷியநிலையமேயாகும். இரும்புத்திரை நீக்கப்படும் நாளை எதிர்பார்த்து இந்த ஆயத்தங்களை அது செய்துகொண்டு வருகின்றது. இந்த ரூஷியநிலையத்தாலே செய்யப்படும் மறுவேலைகள், குருத்துவஅபேட்சகர்களை ஆயத்தஞ் செய்வதும், சாதாரண கத்தோலிக்க அப்போஸ்தலர்களைப் பயிற்றுவதும், ஐக்கியஅமெரிக்கதேசத்திலுள்ள ரூஷிய பிரிவினைச்சபையாரை நல்வழிப்படுத்துவதுமே.

### கற்காலமனிதரும் மிஷனரிமாரும்

கப்புச்சின் சபை மிஷனரிமார் குழு ஒன்று இந்தக்கார்காலத்திலே உலகில்அதிகஞ் சீர்திருந்தாதபகுதிகளில் ஒன்றுக்கு — தேசபடமே எழுதப்படாத நியூகினியாவின் ஒருபகுதிக்குச் செல்லவிருக்கின்றது. அங்கு சஞ்சரிக்கும் சுதேசிகள் கற்காலத்திலேயே இன்றுஞ் சீவிக்கின்றனர். பப்புவாவின் தெற்குமலைநாடுகளிலே இந்தப் பகுதி இருக்கின்றது. அச்சபையைச்சேர்ந்த வண. ஹென்றி குஸ்னெறிச்சுவாமியார் அங்கே நிலைமைகளை ஆராய்ந்துவருமாறு சிலகாலத்தின்முன் ஓர் முன்னோடியாகச் சென்றிருந்தபோது, அங்குள்ள சுதேசிகள் எலும்புகள்கொண்டே தங்கள் அம்புகள், ஈட்டிகளின் கூர்முனைகளை அமைக்கிறார்களென்றும், கற்களிலிருந்தே தங்கள் கோடரிஅலகுகளைச் செய்துகொள்ளுகின்றார்களென்றும் கண்டுகொள்ளலாயினர். அங்கு செல்லும் மிஷனரிமாரின் முதல் வேலை அப்பகுதிச் சுதேசிகளுடன் [illegible] வைத்துக்கொள்வது எப்படியெனப் படித்தறிந்துகொள்வதுதான். இந்தத் தென்பசிபிக் பகுதியிலுள்ள தீவுகளில் பேசப்படும் பாஷைகளைப்பற்றி அச்சிடப்பெற்றனவாய் யாதொன்றுமில்லை. காவற்பொலிசர்கள் அங்கு உள்நாட்டிலே அதிகதூரம் ஊடுருவிச்செல்லுகிற வரை இவர்கள் தங்கள்காட்டு மிஷன்களைக் கரையிலிருந்து ஒருமைல் தூரத்தினுள்ளேயே அமைத்து அதற்குள்ளேயே நின்றுவிடுவார்கள். அங்கே இவர்கள் ஐந்துபுதிய மிஷன் நிலையங்களை அமைத்து, பாடசாலைகளைத்திறப்பதற்கும், தற்காலநவீனமுறையான கமத்தொழில்முறைகளைச் சுதேசிகளுக்குப் பயிற்றுவதற்கும் திட்டமிடுவார்கள். இந்தக்கப்புச்சின் மிஷனரிமாரின் தலைமைஸ்தானம் ஐக்கிய அமெரிக்கதேச பிற்ஸ்பேக்நகரில் இருக்கின்றது.

### விஞ்ஞானியான கன்னியாஸ்திரீ

இங்கிலாந்திலே நொட்டிங்காம் நகரில் சென்ற ஆவணிமாதம் நடந்தேறியஞேமான்சமாதான உலகமகாநாட்டுக்குச் சமுகமளித்திருந்த கன்னியாஸ்திரீமாரில் நாமூர்நகர் நோட்றேடாம் கன்னிகாசபையைச் சேர்ந்த சங். மொனிக்கா ரெய்லர்கன்னியாஸ்திரீயும் ஒருவராவர். இவர் அந்நாட்டிலே கல்வித்துறையில் அதிகங் கீர்த்திவாய்ந்த கன்னியாஸ்திரீமாரில் ஒருவராகக் கொண்டாடப்படுகின்றார். அம்மகாநாட்டில் ஆரம்பவுரைநிகழ்த்திய புரொபெசர் சேர் ஹியூ ரெய்லர் அவர்கள் இவரின் சகோதரர். சென் ஹெலென்ஸ்நகரில் பிறந்த சங். மொனிக்காரெய்லர்கன்னியாஸ்திரீ பிரஸ்தாபம்பெற்ற ஓர்விஞ்ஞானியாவர். கிளாஸ்கோநகரிலுள்ள டொவான்ஹில் பயிற்சிக்கல்லூரியிலே சீவசாஸ்திர பகுதியைத் தலைமை வகித்து நடத்துகிறவர்இவரே. இவர் டி. எஸ்சி.— அதாவது விஞ்ஞானத்திலே கலாநிதிப் பட்டம் பெற்றவர். இவரது கல்விச் சேவைகளைப்பாராட்டிக் கிளாஸ்கோ சர்வகலாசாலை இருவருடங்களின்முன் இவருக்குக் கௌரவ வித்தியாபட்டம் வழங்கலாயிற்று.

### பர்மாப்பிரதமரின் பரிவு

பர்மாதேசத்தின் பிரதமமந்திரியாரான திரு. யூ-நூ அவர்கள் புத்தமதஸ்தராய் இருப்பினும், அயல்நாடுகளில் அவர்சுற்றுப் பிரயாணம்செய்தபோது, தமது நாட்டிலுள்ள கிறீஸ்துவர்களை மறந்துவிடவில்லை. அவர்பலஸ்தீனைத் தரிசித்தபோது, பர்மாவிலுள்ள கிறீஸ்துவர்களுக்கு அன்பளிப்பாக வழங்குவதற்கென ஜெருசலேம்நகரில் 1,000 [illegible] சுரூபங்கள் வாங்கினர். இதுவுமன்றி ஜோர்தான்நதியின் தண்ணீர்அடங்கிய குப்பிகள்பலவும் எடுத்துச்சென்றார்.

### பதின்மூன்றுபேரில் ஒருவர்

கோறியாவிலே கம்யூனிஸ்தர்களால்கைதுசெய்யப்பட்ட பரீஸ் நகர மிஷனரியசபையைச்சேர்ந்த 13 குருப்பிரசாதிகளில் ஒரேயொருவராய்த் தற்போது சீவந்தராயிருக்கும் வண. சாள்ஸ் கொயஸ்சுவாமியார் மிஷன்பணியில் திரும்பவும் ஈடுபடுவதற்காகக் கோறியாவுக்குச் செல்லுகின்றார். பதின்மூன்றுபேருள்ளும் ஆறுபேர் தயைதாட்சணியமின்றிக் கொல்லப்பட்டனர். எஞ்சிய ஆறுபேரும்சிறைச்சாலையிலே இறந்துபோயினர். வண. கோயஸ்சுவாமியார் நாடுகடத்தப்பட்டுப் பிரான்ஸ்தேசஞ் சென்றிருந்தார்.

### மனந்திரும்பிய பாதிரிமார்

மனந்திரும்பிய இருஅங்கிளிக்கன்சபைப் பாதிரிமாரான கௌரவ பற்றிக் ஜோண் ஹெப்பேண் – ஸ்கொட் அவர்களும், திரு. கென்னெத் டெயின் அவர்களும் சென்ற ஆவணி மாதம் 15-ந் திகதியாகிய மாதாவின் மோட்சாரோபண திருநாளன்று வண. கோர்டன் வீவர் சுவாமியவர்களால் லண்டன் நகர் வெஸ்ற்மினிஸ்றர் ஆசனக்கோவிலில் கத்தோலிக்க திருச்சபையில் சேர்த்துக்கொள்ளப் பெற்றனர். பின்னர்இவர்கள் மோட்சாரோபண திருநாள் மாலைப்பூசையிலே அதே ஆசனக்கோவிலில் பாடகர்குழாம் மண்டபத்தில் நீண்டஅங்கியுடனும், சேர்ப்பிளிஸுடனும் சமுகமாகி முதல்நன்மை பெற்றுக்கொண்டார்கள்.

### கடைசியாக வெளியேறியவர்

81 வயதுடையவரான வண. யோசெவ் மரியே லெக்கோர் சுவாமியார் செஞ்சீனாவிலிருந்து நாடுகடத்தப்பெற்றுச் சமீபத்தில் ஹொங்கோங்தீவுபோய்ச் சேரலாயினர். பரீஸ் நகரின் பிறதேச மிஷனைச்சேர்ந்தவர்களாய்ச் சீனாவில் வேதபோதக தொண்டில் ஈடுபட்டிருந்த 214 குருப்பிரசாதிகளில் அங்கு எஞ்சியிருந்து கம்யூனிஸ்தர்களால் கடைசியாக நாடுகடத்தப் பெற்றவர் இவரே. வண. லெக்கோர்சுவாமியார் சீனாவில் ஏறக்குறைய 60 வருடம் செலவிட்டிருக்கின்றார். சென்ற ஐந்துவருடகாலமாக இவர்தமது பங்குக் கிறீஸ்துவர்களுடன் கலந்துகொள்ளாது கம்யூனிஸ்தர்கள் இவரைத்தனிமையாகக் கொண்டுபோய் வைத்திருந்தார்கள். இந்த ஐந்துவருடகாலத்திலும் தமக்கு நடந்தவைகளை அற்பமாகவே ஞாபகத்திற் கொண்டுவரக்கூடிய அத்துணை பலமற்றவராய் இவர் காணப்பட்டார். "சீனாவில் மரிப்பதே எனது நம்பிக்கையாய் இருந்தது" என்று சுவாமியார் கூறுகின்றார். சீனாவில் மிகமிக ஊக்கமாகத் தொண்டாற்றிவந்த மிஷன்குழுக்களில் பரீஸ்நகரின் பிறதேசமிஷனும் ஒன்றாகும். இதைச்சேர்ந்தவர்களாய் அங்கிருந்து நாடுகடத்தப்பெற்றவர்களில் இருஅதிமேற்றிராணிமாரும், எட்டுமேற்றிராணிமாரும் அடங்குவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புரட்டாசி மாதம்

**பொதுக் கருத்து:** பெண்களின் உரிமைப் பிரச்சினைகளுக்குக் கிறீஸ்துவ படிப்பினையின்படி முடிவுகாணும்படியாக. வேண்டிக்கொள்வது.

**மிஷன் கருத்து:** அறியாமையைப் போக்குவதில் கிறீஸ்துவ கல்வி முதலிடம் வகிக்கும்படியாக மன்றாடிக்கொள்வது.

சத்தியவேத
பாதுகாவலன்
1955-ம் ஆண்டு
புரட்டாசி மாதம் 8-ந் திகதி

## ஐக்கிய முன்னணி

"பஞ்சதந்திரம்" என அறியப்படுகின்ற ஐந்து தந்திரக் கதை சுதரிசனன் என்னும் அரசன் ஒருவனோடு ஆரம்பமாவது. இந்தஅரசன் மதிகெட்ட தன் பிள்ளைகளையிட்டுப் பெரிதும்விசனப்பட்டு, "கல்வியும், தருமகுணமு மில்லாத பிள்ளைகள் இருந்தாவதென்ன?" என்று பிரலாபித்தானும். "என் பிள்ளைகளுக்கு நீதிசாஸ்திர உபதேசத்தினால் எந்த மகாபுருஷன் மறுஜனனம் வரப்பண்ணுவான்?" என்று பெருமூச்செறிந்தானும். அவ்வாறே இன்று நம்தமிழ்மக்களின் பரிதாபகரமான நிலைமையையிட்டுப் பிரலாபித்துப் பெருமூச்சுவிடவேண்டியிருக்கிறது. "ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு" என்ற சுலோகத்தைக்காற்றிலேஉதறித்தள்ளிவிட்டு, ஐக்கியங்கெட்டு, இரண்டுபட்டுநிற்கும் தமிழ்ச்சமூகத்தை நோக்குமிடத்து, சுதரிசனன் என்னும் அந்த அரசனைப் போன்று, ஒற்றுமையில்லாத— ஒருமனப்பட்டுநில்லாத— பொதுநலப் போக்கில்லாத— சகலரையும்தழுவிச் செயலாற்றுங்குணமில்லாத இவர்களும் இருந்தாவதென்ன? இவர்களுக்கு நீதிசாஸ்திர உபதேசத்தினால் எந்த மகாபுருஷன் மறுஜனனம் வரப்பண்ணுவான்? என்றே நாமும் சிந்திக்கவேண்டியவராகின்றோம். இந்தநிலைமையிலே தமிழ்மக்களுள் ஓர்ஐக்கிய முன்னணியை ஆக்கிப்போடவேண்டுமென்று ஒருபாலார் அரும்பாடுபடுகின்றனராமென அறியவருமிடத்து எவர்தான் ஆச்சரியப்படார்? இலங்கையில் தமிழர்கள் சிறுபான்மையினர். ஆனால், அவர்களுக்கிடையே தலைகாட்டியுள்ள அரசியற்கட்சிகள் ஒன்றுக்கொன்று விபரீதபோக்கும், முரண்பட்டநோக்குமுடையனவாய் அவர்களை மேலும் சிறுபான்மையினராக்கிவிட்டிருக்கின்றன. ஐக்கிய தேசியகட்சி, தமிழ்க்காங்கிரஸ் கட்சி, தமிழரசுக்கட்சி, கம்யூனிஸ்தகட்சி, நவலங்கா சமசமாஜகட்சி, மறுலங்கா சமசமாஜகட்சியாதியாம் பல்வேறு அரசியற்கட்சிகளில் தமிழ்மக்களிடையே தள்ளுபடியானது ஒன்றுமில்லை. இவ்விதம் சிறுபான்மையினரான தமிழ்மக்கள் ஆறுகட்சிகளாகப் பிரிந்தமையாலே அவர்கள் மேலுந்தங்களைச் சிறுபான்மையினராக்கிக் கொண்டார்களென்று சொல்லவும்வேண்டுமா? இத்தகைய ஓர் கவலைக்கிடமான நிலைமையிலே தாண்டிக்காய்க்குள் சனியன் புகுந்தவாறாய் மொழிப்பிரச்சினைஒன்று குறுக்கிட்டுவந்து, ஊரைஇரண்டுபடுத்தி உள்ளதையும் கெடுத்துக்கொண்டு நிற்கின்றது. தமிழுக்கும், சிங்களத்துக்கும் இலங்கையிலே சமஉரிமை இல்லையென்றும், இந்தச்சமஉரிமையை வழங்கும் நோக்கமாக அரசியல்திட்டம் திருத்தியமைக்கப்பட வேண்டுமென்று தமிழர்களுள்ஒருபாலாரும், தமிழரான சனப்பிரதிநிதிகளுள் ஒருபாலாரும் நிற்கின்றனர். இலங்கையிலுள்ள இரு தேசியமொழிகளுள் ஒன்றைவிட மற்றொன்றுக்கு ஏற்றம் அல்லது தாழ்வு அளிக்கக்கூடிய எந்தப்பிரமாணத்தையும் ஆக்கிக்கொள்ள முடியாதென்றும், இப்போதுள்ள அரசியற்திட்டப்படி சிங்களம் அரசகருமமொழியானால் தமிழும் அரசகருமமொழியாகுமென்றும், அதனால் தமிழ், சிங்களமாகிய இருமொழிகளுக்கும் இலங்கையிலே சமஉரிமைஉண்டென்றும் தமிழர்களுள்ஒருபாலாரும், தமிழரான சனப்பிரதிநிதிகளுள் ஒருபாலாரும்நிற்கின்றார்கள். நிலைமைகள் இவ்வாறிருக்க, அதற்கிடையிலே நவலங்கா சமசமாஜ கட்சித்தலைவர் டக்றர் என். எம். பெறேரா அவர்கள் தமிழுக்காகவும், தமிழருக்காகவும் கரைந்துருகுவார்போல இலங்கையிலே தமிழுக்கும், சிங்களத்துக்கும் சமஅந்தஸ்து இருக்கும்படியாக அரசியல்திட்டத்தைத் திருத்தியமைக்கவேண்டுமெனக் கேட்டுப் பிரதிநிதிகள்சபையிலே பிரேரணைஒன்றைக் கொண்டுவர ஆயத்தப்படுகின்றார். சனப்பிரதிநிதிகள்சபையிலே இவர் எக்கட்சியைச் சேர்ந்தவர்? எதிர்க்கட்சியைச்சேர்ந்தவர். எதிர்க்கட்சியினரால் கொண்டுவரப்படும் பிரேரணைகள் பொதுவாகப் பிரதிநிதிகள் சபையில் அரங்கேறுவதில்லையென்று அவர்களே முறையிட்டு செய்துகொண்டு வருகையில் இந்தப்பிரேரணையின் கதியும் என்னவாகும்? ஆதலால் தமிழ்மொழுப் பிரச்சினையைத் தமிழர்களே — தமிழ்ச்சனப்பிரதிநிதிகளே தீர்க்கவேண்டும். அரசியற்திட்டத்திலே தமிழுக்குச் சமஉரிமைஉண்டென்றும், அதற்குச்சமஉரிமை இல்லையென்றும் வாதாடுகின்ற தமிழர்களும், தமிழரான சனப்பிரதிநிதிகளும் தம்முளே ஒருகம்மிஷனை நியமித்து, அந்தச் சமஉரிமை உண்டா, இல்லையாஎன்பதை அதுவே தீர்க்காலோசனை செய்து தீர்ப்புச்சொல்லைச் செய்தாலென்ன? இதுவிஷயமாக ஓர் ஐக்கியமுன்னணியை ஆக்கிக்கொண்டாலென்ன?

## வேனிற்கால மாளிகையில் பாப்பரசர்

காஸ்தெல் கான்டல்போ எனப்படும் பாப்பரசரின் கோடைகால வாசஸ்தானத்தை நோக்கித் தற்சமயம் யாத்திரிகர்களும், தரிசகர்களுமான பல்லாயிரம் மக்கள் சரிந்துகொண்டிருக்கின்றனர். இப்போதுபாப்பரசர் அங்கே புதன், சனி ஆகிய இருதினங்களிலும் பிற்பகலில் அவர்களுக்குப் பேட்டியருளுகின்றார்.

சென்ற மாரிகாலத்தில் அவர் நோயால் பீடிக்கப்பட்டு அபாயகரமான நிலையிலிருந்தார். தைமாதத்திலேயே அவர் அபாய நிலையிலிருந்து தப்பியுள்ளார் என்று அறிவிக்கப்பட்டது. கடந்தஏழுமாதங்களிலும் அவரதுசுக நிலையில் திருப்திகரமான மாற்றம் ஏற்படலாயிற்று. அதனாலேயே அவர் அல்பான்குன்றிலுள்ள காஸ்தெல்கான்டல்போவுக்குச் சுகத்துக்காகச்சென்று, அங்கே இத்தாலியரும், பிறருமான அநேகருக்குப் பேட்டியளித்து அவர்களை உற்சாகப்படுத்திவருகின்றார்.

பேட்டிபெறுவதற்கு விரும்புகிறவர்கள் விசேட அனுமதிச்சீட்டுப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். இச்சீட்டுகளைப் பேட்டியளிக்கப்படும் சபாமண்டபத்தின் தலைவரிடமிருந்தே பெறலாம். யாத்திரிகர்களும், தரிசகர்களும சாதாரணமாக இச்சீட்டுகளைத் தமது இராச்சிய பிரதிநிதிகள்மூலமாக இலகுவாகப் பெறுகின்றனர். கூட்டங்கூட்டமாகச் செல்லுகிறவர்களுக்கு மேல்மாடியின் முன்றிலிலே மேற்சாளரத்தின் மேடைமீதிருந்தே பேட்டியருளப்படுகிறது. இவர்கள் பேட்டிமுற்றத்திற்குப்போகுமுன் சோதனை செய்யப்படுகிறார்கள்.

வாயில்வழியின் மேலேயுள்ள கடிகாரம் ஆறுமணிஅடித்ததும் ஒருபணியாள்வந்து சித்திர. வேலைப்பாடுள்ள சீலைஒன்றை மேலேயிருந்து தொங்கவிடுவார். சொற்பநேரத்துள் பாப்பரசரின்உருவந்தோன்றும். அடக்கமுடியாத ஆனந்தகோஷம் மாளிகைமுற்றத்தைநடுங்கவைக்கும். பரிசுத்தபிதா ஓர் இருப்புச்சலாகையில் சாய்ந்தபடியே அங்கு குழுமியிருக்கும் தரிசகர்களுக்கு நல்வரவுகூறும் பாவனையாகத தமதுகரங்களை விரிப்பார். சிறிதுநேரத்தால் அவர்களை அமைதியாயிருக்கும்படி பாவனைகாட்டி, இத்தாலிய மொழியில் முதன்முதல்பேசுவார் சபாமண்டபத்தின் அதிபரினால் தயாரித்துக் கொடுக்கப்பட்ட தரிசகர்களின் பெயர்களையும் வாசிப்பார். அப்படிவாசிக்கும்போது அப்பெயர்வழிகாரர் ஆனந்தஅக்களிப்புடன் தமது கைக்குட்டையையோ, தொப்பியையோகாட்டித் தமதுமகிழ்ச்சியைத் தெரிவிப்பர். முதன்முதல் இத்தாலிய மொழியில் பேசியபின்னர் பிரான்சியம், ஜேர்மனியம், ஆங்கிலம், ஸ்பானியம், போர்த்துக்கேயம் முதலாம் மொழிகளிலும் அவரவர் மொழிகளுக்கேற்பப் பேசுவார். தரிசகர்கூட்டங்களும் தத்தம் [illegible] கூறும். சொற்பசொற்பநேரத்தைப் பரிசுத்தபிதா இக்கூட்டங்களுடன் செலவிடுவார்.

ஏறக்குறைய அரைமணிநேரமே இப்பேட்டிநீடிக்கும். பேட்டிமுடிவில் தரிசகர்கள் முழந்தாட்படியிட்டு ஆசிவேண்டுவர். பாப்பரசர் ஆசீர்வாதம் அளிப்பதற்குரிய மந்திரத்தின் முதற்பகுதியை உரத்துப்பாடுவார். பாடிக்கொண்டே சிலுவைவரைவார். அவர்செயலை மாடியிலும், கீழுமுள்ள அநேகபளிங்குக்கற்கள் பிரதிபலிக்கும்.

சாளரம் மறுபடியுந்திறக்கவே பாப்பரசர் மறைந்துவிடுவார்.

---

## யோசேவாஸ் முனிவர் சரித்திரத் துணுக்குகள்

### 4. அவருடைய் கல்லறை எங்கே?

யோசேவாஸ் முனிவருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் சூட்டுதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் இந்நாட்களிலே அபிமானமுள்ள சிலகத்தோலிக்கரிடமிருந்து "அவருடைய சடலம் எங்கே அடக்கம்செய்யப்பட்டது?" என்றகேள்வி எழுந்திருக்கிறது.

சிலர், முனிவரை நல்லடக்கம் செய்த கல்லறையைக் கண்டுகொள்ளும்வரையில் அவருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் சூட்டப்படும் விஷயத்தில் மேற்கொண்டு எவ்விதமுன்னேற்றமும் நடைபெறமுடியாதென்று நம்புகிறார்கள்.

சாதாரணமாக முத்திப்பேறுபெற்றபட்டம்சூட்டப்படும் நடைமுறையிலே குறிக்கப்பட்ட ஒருவரின் புண்ணியசாங்கோபாங்க சீவியத்தைப்பற்றி அவ்விடத்து மேற்றிராணிமாரின் நீதிமன்றம் விசாரணைசெய்யும். அவ்விசாரணை பூர்த்தியானதும் அந்தத்தேவஊழியன் அடக்கம் செய்யப்பட்ட கல்லறை பரிசோதிக்கப்பட்டு நிச்சயப்படுத்தப்படும். இதையே திருச்சபையின் 2096-ம்சட்டம் நமக்குத்தெரிவிக்கின்றது. பின்னர் கல்லறையில்காணப்பட்ட சடலத்தின் மீதிகள் (என்புமுதலாயினவை) பரிசுத்தபண்டங்களாகக் காப்பாற்றப்படும். மேலும், பிரேதக்குழியில் சடலம்காணப்படும் நிலைமையிலிருந்து அவர் எவ்வாறு மரணித்தார் என்பதற்குரிய சிலசான்றுகளையும் நாம் காணக்கூடும். வேதசாட்சியாக உயிர்விட்ட ஒருவரின்விஷயத்தில் அவருடையபூதஉடம்பு பலதுணைக்குறிப்புக்களை நிச்சயமாக்கும். எல்லாவற்றிலும் மேலாகக் கல்லறை கண்டுபிடிக்கப்பட்டால் அது நமக்குத் தெரிவிக்கிறவிஷயம், அவர் உண்மையாகச் சீவித்தார்என்பதும், மரணித்தார்என்பதுமே.

கல்லறையில்சடலம் அழியாமல்இருந்தால் குறிக்கப்பட்டவரின் பரிசுத்ததனத்தையும், அர்ச்சியசிட்டராகுவதில் கடவுளின் திருச்சித்தத்தையும் அதில் நாம்உணரலாம். ஆயினும் தேகம் அழியாமலிருப்பது, திருச்சபைக்கு அவசியமானபுதுமைகளில்ஒன்றாகக் கருதப்படுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்க்பட்டினத்து அர்ச்சியசிட்ட அருளம்மாள் (St. John of Arc) என்பவளைப்போலச் சரீரம்சாம்பலாய் எரிக்கப்பட்டிருந்தால், அல்லது யோசேவாஸ் முனிவரைப்போலக் கல்லறை கண்டுகொள்ள முடியாததாய் இருந்தால் திருச்சபை தன்னுடையவிசாரணைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடுவதில்லை. இதற்காகக் காலதாமதம் பண்ணுமல் ஆகவேண்டியவற்றைச் செய்யும்.

ஸ்தலமேற்றிராணிமார் கடின ஆராய்ச்சி செய்தும் கல்லறை கண்டுபிடிக்கப் படவில்லையென்று திருச்சபையைத் திருப்திப்படுத்தல் வேண்டும். யோசேவாஸ்முனிவர்விஷயத்தில் அவர் இறந்து இரண்டரை நூற்றூண்டுகளாயின. அப்பொழுது இலங்கையில் கத்தோலிக்க திருச்சபை மறைமுகமாகத் திருவூழியம்புரிந்ததால் அவருடைய கல்லறையை அறிதல் இலகுவானவிஷயமன்று.

பதினெட்டாம நூற்றூண்டின் மத்தியபகுதியில் கோவைக்குருமார் புதிதாக அரசபீடத்துக் கேறிய நாயகர்வம்சத்தாரால் கண்டியிலிருந்து கலைக்கப்பட்டனர். அவர்களுடைய பிரிவினல் கண்டி இராச்சியத்திலிருந்த கத்தோலிக்க சமூகமும் படிப்படியாய்க் குறைந்து மறைந்தது. பின்னர் கோவையில் தியான ச்ம்பிரதாயக் கூட்டமும் இல்லாமற்போயிற்று. கோவைக்குருமார் இலங்கையில் சென்றநூற்றூண்டின் இறுதிவரையில் திருஊழியம்செய்திருந்தாலும் அவர்களிடத்தில் முறையான சரித்திரத்தொடர்பு காணப்படவில்லை.

இத்தாலிய, பிரான்சிய குருமார் 19-ம்நூற்றூண்டின் மத்திய காலத்தில் ஊழியம்செய்ய ஆரம்பித்தபோது ஆசாரத்துக்குரிய முனிவருடைய கல்லறையை நிச்சயப்படுத்த ஆராய்ச்சிசெய்தும் பலன்கிடையாமற் போயிற்று. ஆகையால், நிச்சயமாக நாம்எவரிலும்இதற்காகக் குற்றம்சுமத்த முடியாது. கோவைக்குருமார் கண்டி இராச்சியத்திலிருந்து பிரிந்துசென்றதும் ஆட்சிப் பீடத்திலிருந்தவர்கள் கல்லறைகளையும், அவற்றின் அடிச்சுவடுகளையும்கூட முற்றூக அழித்துவிட்டார்கள். அன்றியும் அவ்விடங்கள் வேறுசமூகத்தாரால் தங்களுடையதென உரிமை கொண்டாட உத்தரவளிக்கப்பட்டதெனவும் நாம் அறிகின்ரேம்.

எது எப்படியிருந்தாலும் நம்மிடமுள்ள சரித்திரக்குறிப்புகள் ஒருநாளைக்கு யோசேவாஸ் முனிவருடைய கல்லறைக்கு நம்மை அழைத்துச்செல்லுமென்று நம்புகின்ரேம். சுவாமியவர்களுடைய கல்லறையைக் காட்டித் தருமாறு பொறளையில் நடைபெறும் வேண்டுதல்களில் நாமும் இணைந்துகொள்வோமாக. எங்களுடைய இலங்கை மாதாவின் அன்புள்ள இருதயம் இந்தவரத்தை எங்களுக்கு அளிக்கவேண்டும்.

"உண்மையான மனிதன் எவரையுமே துவேஷிப்பதில்லை" —நெப்போலியன்



## சதாசகாயமாதா கோணம்

### "அவமானத்திலிருந்து காக்கப்பட்டேன்"

இவ்வாண்டு பங்குனிமாதம் 21-ந்திகதிநடந்த ஒருகளவில் நானும்அநியாயமாக உடந்தையாக்கப்பட்டேன். இந்தக்களவுசெய்த அக்கிரமிகள் மகா சாமர்த்தியவான்கள். அவர்கள் தங்கள் கெட்டித்தனத்தினுல் என்னையே குற்றவாளியாக்குவதற்கு எல்லாவித முன் ஏற்பாடுகளுஞ் செய்திருந்தார்கள். அவ்வேற்பாடுகள் நான் அகப்பட்டுள்ள நிலைமையிலிருந்து என்னை விடுவிக்கவோ, எனது குற்றமில்லாத்தன்மையை நிலைநாட்டவோ முடியாதனபோல் காணப்பட்டன. நிர்அபராதியான என் அவமானம் பட்டபாட்டை என்னென்பது? அவநம்பிக்கைகளும் பிசாசுக்கிரையாகிப் போவேனேஎன்றும் அங்கலாய்த்தேன். நான்எடுத்துக்கொண்ட பிரயத்தனமெதுவும் எனக்குச்சகாயமாக முடியவில்லை. கடைசியாக, வேறுவழியின்றிச் சதாசகாயமாதாவின் அடைக்கலத்தைநாடினேன். அவவின்பாதத்தில் என்விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தேன். இந்தஅவமானத்திலிருந்து என்னைக்காப்பாற்றும்படி என்றுமில்லாதவிதமாக அவவிடம்மன்றூடினேன். தாயாரின் புதுமையே புதுமை. ஒருவிதசந்தேகத்துக்கோ, ஆட்சேபனைக்கோ இடமில்லாது, நான் முற்றும் நிர்அபராதியெனக்கண்டு, நம்பிக்கைக்கும், உத்தரவாதத்துக்கும் இலக்காயிருக்க எனது பதவியில் என்னைமீண்டும் நியமித்துள்ளார்கள். சதாசகாயமாதாவின் விசேஷஇரக்கமும், தயவும் இல்லாதிருந்திருப்பின் இந்தச்சண்டாளர் என்னை அவமானத்துக்குள்ளாக்கிவிட்டுத் தாங்கள் தப்பியிருப்பார்களென்பதே எனது எண்ணம். இதற்கு எள்ளளவுஞ் சந்தேகமில்லை.

இந்த மாபெருந்தயவுக்காகச் சதாசகாயமாதாவுக்கு என் இதயபூர்வமான நன்றியைப் பகிரங்கமாகச் சமர்ப்பிக்கிறேன். அவவுடைய திருச்சேத்திரத்துக்கு ஒன்பது புதன்கிழமைகள் தொடர்ச்சியாகச் செல்லத்தவறமாட்டேன் என்று அவவுக்கு வாக்களிக்கிறேன். அத்தோடமையாது எனது சீவியகாலம்முழுவதும் அவவுக்குக் கடமைப்பட்டவனுய் இருப்பேன. என் பெண்சாதி, பிள்ளைகளும் இந்தநன்றித்துதியில் என்னேடுசேர்ந்து மாதாவைவாழ்த்துகிறூர்கள்.

சதாசகாயமாதா எனக்குப்பெற்றுத்தந்த இந்தநன்மைக்கு உரியவிதமாக நன்றிசெலுத்த என்னுல் முடியாதென்பதை நான் அறிவேன. ஆனுல், என் நன்றிக்கடனின் ஒருசிறு அடையாளமாக இத்துடன் அனுப்புவதை ஏற்றுக்கொள்ளும்படி தயவாகவேண்டுகிறேன்.

சதாசகாயமாதாவின் பக்திமுயற்சியைப் பரப்புவதில் தாங்கள்காட்டும் ஆர்வம் மெச்சப்படத்தக்கதே. தேவன் உங்களையும், உங்கள்திருத்தொண்டையும் ஆசீர்வதிப்பாராக.

(பொறளை சகல அர்ச்சியசிட்டவர்களின் [illegible] வண. ஹெறத்சுவாமியாருக்கு, நீர்கொழும்பு திரு. ஜோன் ஞெட்றிக்கோ அவர்கள் அனுப்பியகடிதம், "கோவனைப்புதினம்" எனும் ஆங்கிலப்பத்திரிகையிற் பிரசுரிக்கப்பட்டது. அக்கடிதத்தின் தமிழ்ச்சாரம் இதுஎன்க.)

## சுதேச வர்த்தமானம்

### சயரோகிகளுக்குப் புதியகட்டடம்

சாவகச்சேரி, அரசினர்ஆஸ்பத்திரியிலே இதுவரை சயரோகிகள் காற்ரேட்டமற்ற இருண்டவாட்ஒன்றில் விடப்பட்டுவந்தனர். ஆனுல், சமீபத்திலேஅவர்களுக்கெனப் போதியவிசாலமும், காற்ரேட்டமுமுடைய தாய், மின்சாரவிசிறிகள், கழுவும்பேஸின்கள், குளிக்குந்தொட்டிகள், சுகாதாரமுறைப்படியே அமைக்கப்பட்ட மலசலகூடங்கள், சுத்தமான அழகிய படுக்கைகள் ஆகியவற்றுடன் கூடியதாய் அமைக்கப்பட்ட புதியவாட்டுகள் சென்ற 6-ந்திகதியன்று திறந்துவைக்கப்பெற்று, சயரோகிகளும் அதில் கொண்டுபோய் விடப்பட்டிருக்கிறூர்கள். இந்தவாட்டுகளை அமைக்க அரசாங்கத்துக்குச் சென்றுள்ளசெலவு 70,000 ரூபாவாகும்.

### இரண்டு லட்சம்புசல்நெல்

மன்னூரிலே இம்முறை சிறுபோக வேளாண்மையில் விளைந்திருக்கும் சுமார் இரண்டுலட்சம்புசல்நெல் அறுவடை முடிவடைகின்றது. இந்த நெல்லைக் கமக்காரர் மன்னூர்ப்பகுதியிலுள்ள விளைபொருள்உற்பத்திச் சங்கங்கள்மூன்றுக்கு விற்பனைசெய்ய பின்வந்திருக்கின்றனர். ஆயினும் இந்த நெல்லை உடனடியாகக் கொள்வனவு செய்யாமல் இருவாரங்களின் முன்னரே கொள்வனவுசெய்ய வேண்டுமென மன்னூர் அரசாங்கஏசன்றர் அவற்றிற்குத் தெரிவித்திருக்கின்றூர்.

### இரணைமடுக் காணிப்பங்கீடு

இரணைமடுக் குடியேற்ற திட்டத்தின்கீழ் கடைசிமுறையாக அளிக்கப்படவிருக்கும் நானூறுதுண்டுக் காணிகளுக்கும் நாலாயிரம்பேர் மனுப்பண்ணியிருக்கின்றனர். அதனுல், காணிகள் வழங்குதற்கென்று ஆட்களைத்தெரிந்தெடுக்கும் நேர்முகப்பரீட்சைகள் சென்றவாரம் ஆங்காங்கு நடைபெறலாயின. தெரிந்தெடுக்கப் படுவாருக்கெல்லாம் இம்மாதமுடிவிற்குள் காணிகள் வழங்கப்படும். மொத்தமாக 648 நெல்விளைநிலங்கள் பகிர்ந்து கொடுக்கப்படும். இவற்றிலே 248 நிலங்கள் வேலையற்றிருக்கின்ற கற்றவாலிபர்களுக்கும், கமத்தொழிற்பாடசாலை மாணவர்களுக்கும் பகிர்ந்துகொடுபட்டுவிட்டன. மீதியான 400 நிலங்களும் பொதுசனங்களுக்கென விடப்பட்டுள்ளன. இவைகளும் கொடுபட்டுவிட்டால் இரணைமடுக் குடியேற்ற திட்டத்தின்கீழ் வேறுநிலமெதுவும் பகிர்ந்துகொடுப்பதற்கு எஞ்சியிருக்கமாட்டாது.

### ஸ்தானிகரின் புத்திபோதனை

ஜாயெலையிலுள்ள ஸ்ரீசச்சாரித ஞாயிறுவாரப் புத்தபாடசாலைப் பரிசளிப்புவிழா சென்றதிங்கட்கிழமை நடந்தேறியது. அதற்கு இலங்கையிலுள்ள பர்மியஸ்தானிகரான திரு. யு. பா லுவின் அவர்கள் தலைமைவகித்துப் பேசியவிடத்து, கிறீஸ்துவர்களையோ அன்றேல் இந்துக்களையோ எதிர்த்துப் போராடியதற்காக எவருமே நிர்வாணத்தை அடையமாட்டார்களெனக் கூறிக் கத்தோலிக்கருடனும், இந்துக்களுடனும் சமாதானமாக வாழும்படியாகப் புத்தர்களுக்கெல்லாம் மனுப்பண்ணிக்கொண்டார்.

### திரு. வ. தூசைப்பிள்ளை அவர்களின்
## தேகவியோகம்

மாதகல்வாசரும், நமதுஅச்சகத்திலே நாற்பதுஆண்டுகளுக்குமேல் பிரமாணிக்கமாகக் கடமையாற்றிவந்து, சிலவருடங்களின்முன் இளைப்பாறியவரும், ஓர்வரகவியாக விளங்கி "இன்பகவி"ப் புலவரெனப் பிரஸ்தாபமாக அறியப்பெற்றவரும், யாழ்ப்பாணத்திலே பலராலும் நன்கறியப்பட்டவராயிருந்து காலஞ்சென்ற திரு. வ. ம. லோப்பையா அவர்களின் சகோதரருமான திரு. வ. சூசைப்பிள்ளை அவர்கள் விருத்தாப்பியநோய் கண்டிருந்து நேற்றுப்புதன்கிழமைஇரவு காலஞ்செல்லலாயினரெனும் துயரசெய்தியை அறியவந்து பெரிதும்மனவருந்தலானேம்.

R. I. P.

## வறுமையின் மகிமை

வறுமையே! உன்னைவாழ்த்துகின்றேன். என்னைச்சிலர் பித்தனென்று பேசக்கூடும். மூட்டாள்என்று இகழக்கூடும். ஏன்? உன்னை வாழ்க என்று வாழ்த்துவதற்காக!

நீ வாழவேண்டுமா? மாளவேண்டுமா? நீ இன்று மக்களை வாட்டி வதைத்துத் துன்புறுத்துங் காரணமாக நீ மாளவேண்டும்என்று பலர்முழக்கும் நேரத்திலே நான் கூறுகின்றேன் நீ வாழவேண்டும் என்று!

உலகில் தோன்றிய உத்தமர்களின் வாழ்க்கை வரலாறுகள், விஞ்ஞானத்தை விளங்கவைத்த மேதைகளின் சரித்திரங்கள் நமக்குப் போதிப்பது என்ன? நீ வாழவேண்டும் என்பதுதான். உலகை உலகாக்க, உலகிலே அன்புநெறி போதிக்க, உலகமக்களை நல்வழியிலே கொண்டுசெல்லத் தோன்றிய பெரியார்கள் இளம்வயதிலே தனவந்தர்களாக இருக்கவில்லை. வறுமையாலே மூடப்பட்டு, அன்றூடச்சோற்றுக்குத் திண்டாடித்திரியும் ஏழைகளாகவே இருந்தனர். வறுமையே! அன்று நீ அவர்களிடம் இல்லாவிட்டால் இன்று அவர்கள் இந்தஉலகை உருவாக்க முற்பட்டிருப்பார்களா?

இவர்கள் மட்டுமா? இல்லை. பகலும் இரவும் உறக்கமின்றி உண்ணவுணுமின்றி யோசித்து, யோசித்துப் பலபல சோதனைகள் நடத்தி உலகுக்கு உதவும பலநன்மைகளைச் செய்தவிஞ்ஞானிகள் பணம்படைத் திருந்தார்களா? இல்லை. வறுமையின் பிடிப்பில் — துன்பத்தின் துடிப்பில் வளர்ந்தே இன்று உலகமக்களால் மதிக்கப்படுகின்றனர். அன்று அவர்கள் அப்படித் துன்பம் அடையாவிட்டால் இன்று மற்றைய மக்களின் துயர்களைய முன்வந்திருப்பார்களா?

ஆங்கிலமொழியின் நாடகஎழுத்தாளர் சேக்ஸ்பியர் யார்? அடிமைவிலங்கறுத்த ஆபிரகாம் லிங்கன் யார்? விடுதலை வேட்கைகொண்ட வீரத்தமிழன் பாரதி யார்? ஆங்கிலநாட்டுக் கவி ஷெல்லி யார்? அணுக்குண்டின் தந்தை ஐன்ஸ்ரைன் யார்? மனுக்குலத்துக்கு ஈடேற்றவழியைக் காண்பிக்க அன்று மானிடச்சட்டை சாத்திய யேசுபெருமான் யார்? இவர்கள் எல்லோரும் பணத்தின் படுக்கையிலே, செல்வத்தின்உச்சியிலே வாழ்ந்தவர்கள் அல்ல. சாதாரண ஏழைகளாய் உடுக்க ஓர் துண்டின்றி, உண்ண உணவின்றி ஒருகாலத்தில் வாழ்ந்தவர்கள்.

ஆகவே, வறுமையே! நீ எங்களுக்கு—மனிதவர்க்கத்திற்குத் தீமைசெய்யவில்லை. நன்மையே செய்துள்ளாய். வறுமையே! இன்று உன்னைச்சாட்டி எத்தனைபேர் தங்கள்கட்சிகளுக்கு ஆதரவு தேடுகின்றூர்கள்? நீ இன்று இல்லாவிட்டால் மதியயக்கத்திலே, பணச்செருக்கிலே, இன்பநிலையிலே தம்மையே மறந்து இறைவனையே மறந்துவிடும் மனித சமூகம். வறுமையே! நின் பெருமைதான் என்னே! இதற்காகவே நான் உன்னை வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்



## குடும்பத்தின் விரோதி

பாடசாலை முடிந்து வீடுவந்து சேர்ந்தவுடன் நேசனும், அவன் தங்கை மலரும் சமையலறை சென்றபோது அங்கே அழுதுகொண்டு இருந்த அவர்களின் தாய் பிள்ளைகளைக் கண்டதும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு ஏதோ வேலையில் ஈடுபடுபவள்போல் பாசாங்குசெய்தாள். அப்போது,

நேசன் — அம்மா! ஏன் அழுது கொண்டு இருந்தீர்கள்?

தாய் — நான் அழவில்லை. கண்களில் புகைபோனதால் கண்கள் கலங்கின.

மலர் — இல்லை, அம்மா இன்றைக்கு மட்டுமல்ல, என்றைக்குமே எதையோ நினைத்துக் கலங்கிக் கொண்டு இருக்கிறு.

நேசன் — அம்மா! நீங்கள் அழுவது எதற்காக என்பது எனக்குத் தெரியும். அப்பா தினமும் குடித்து வெறித்துக் கூத்தாடிக்கொண்டே வருகிறார். ஒவ்வொரு வாரமும் எவ்வளவோ பணத்தைச் சுவீப்டிக்கெற் வாங்குவதிலே செலவிடுகிறார். அவர்குடிக்கத்தொடங்கியபின் எங்களுக்கு நேரத்திற்குச் சாப்பாடும் இல்லை. இங்கு இரவிலே அவர்போடும் கூச்சலால் குடும்ப செபமாலையும் குழம்புகின்றது. அதனால் அம்மா! நீங்கள் கலங்கவேண்டியதுதானே?

(அப்பொழுது நேசனின் தந்தை வருகிறார்)

தந்தை — என்னடா, சமையல் அறையிலே சமாதான மகாநாடா? எந்த நாட்டுக்காகவடா இந்தமகாநாடு?

நேசன் — அப்பா, எந்த நாட்டுக்குமாகஅல்ல; ஆனால், எங்கள் குடும்ப...

தந்தை — அதனால் என்னைத் தொலைத்துவிடத் திட்டம் போடுகிறீர்களா?

நேசன் — அப்படிச் சொல்லவேண்டாம் அப்பா. "மனிதன் முதலில் மதுபானத்தைக் குடிக்கிறான்; பின்னர் குடியே அவனைக் குடித்துவிடுகிறது" என அன்று மதுவிலக்குக் கூட்டத்திலே சொன்னார்கள். நீங்கள் தினமும் குடித்துவிட்டுவந்து ஒருகுற்றமும்செய்யாத அம்மாவைஅடித்து உதைக்கிறீர்கள்; வீட்டுத் தளபாடங்களை வீணுக் உடைக்கிறீர்கள். அதிர்ஷ்டம் வருமென்று சுவீப்பிலே அதிகபணம் செலவிடுகிறீர்கள். அப்பா எங்களைப்பாருங்கள். எப்போதும் கலங்கிக்கொண்டு இருக்கும் அம்மாவைப் பாருங்கள். இந்தக்குடியை விட்டுவிடுங்கள் அப்பா. குடும்ப சமாதானத்தை உறிஞ்சிக் குடிக்கும் மதுபானத்தை விரட்டி விடுங்கள் அப்பா.

தந்தை — சீ, கழுதை வாயைமூடு. நீயும் எனக்கு உபதேசம் செய்ய வந்துவிட்டாயா, நேற்று முளைத்த காளானுகிய நீ? இவ்வாறு கூறிக்கொண்டே நேசனுக்கு அடிபோடுகிறார். அப்பொழுது அவன் தங்கை மலர் கூச்சலிட்டு அழுகிறாள்.

சிலமாதங்கள் சென்றன. ஓர்நாள் நேசனின்தந்தை திடீரெனக் கடின வியாதிகண்டு படுக்கையில் விழுந்தார். அவருக்குத் தகுந்த வைத்தியம் செய்விக்கக் கையிலே பணமின்றிக் கலங்கினுள் மனைவி. இவ்விதம் கலங்கிக் கொண்டு இருக்கையில் நேசன் ஓடி வருகிறான்.

நேசன் — அம்மா, இந்தப்பெட்டியில் இருக்கும் பணத்தை எடுத்து அப்பாவுக்கு வைத்தியஞ் செய்வியுங்கள்.

தாய் — இது யாருடைய பெட்டி?

நேசன் — வேறு எவருடையதும் அல்ல. எங்களுடையதே.

சில தினங்களின்பின் தந்தை குணமடைந்தார். ஒருநாள் அவர் நேசனையும், மலரையும் பிள்ளைகளே இங்கே வாருங்கள் என்று அன்பாய்அழைத்து: நான் செய்த குற்றங்களை மறந்துவிடுங்கள்; எனக்கு இப்போது புத்திவந்துவிட்டது; மதுபானத்தை விரட்டி விட்டேன். தம்பி, நேசன்! நான்வருத்தமாய் இருந்தபோது எனக்கு வைத்தியம் செய்விக்க நூறுரூபாவுக்குமேல் கொடுத்தாயாம். இந்தப்பணம் யாருடையது? உனக்கு எப்படி வந்தது?

நேசன் மறுமொழியாக: அப்பா, இது வேறுயாருடைய பணமும் அல்ல; நீங்கள் தான் வருந்திஉழைத்த பணம்; தினமும் நீங்கள் குடித்துவிட்டு இங்கு வந்து மயங்கிக்கிடக்கும்போது உங்கள் சட்டைப்பைகளில் இருந்த சில்லறைகளை நான் ஒவ்வொருநாளும் எடுத்து ஒருபெட்டியில் போட்டு வைத்தேன்; என்னை மன்னியுங்கள் அப்பா என்றான்.

மலரும், "ஆம் அப்பா, நானும்கூடத்தான் இதைச்செய்தேன்; என்னையும் மன்னியுங்கள்" என்றாள். அவற்றைக் கேட்டுநின்ற தாய்: நல்லது, நீங்கள் இரண்டுபேரும் சேர்ந்துதானு இந்த நாடகம் நடத்தினீர்கள்? என்றாள்.

வே. சாமுவேல்,
உரும்பிராய்.

## அண்ணா சொல்வது:

அருமைச் சகோதரங்களே!

இன்று எமது தேவஅன்னை பிறந்ததினம். இத்தாயை நாம் கிறீஸ்துவர்களின் சகாயம்என்று அழைக்கிறோம்.

பிறந்தநேரந் தொடக்கம் சீவன் உள்ளளவும் தாய் தன் பிள்ளையைப் பேணிப் பாதுகாக்கிறாள். உணவுஉடை தருகிறாள். வெயில், குளிர்பட்டுக் குழந்தை வருத்தமடையாமல் கவனிக்கிறாள். நற்புத்திபோதரவு கூறுகிறாள். நல்லவழியில் பிள்ளையை நடத்துகிறாள். குழந்தைசெய்த குற்றத்திற்காகத் தகப்பன் தண்டிக்கும் பொழுது, அவனை அணைத்து, ஆறுதல்தந்து, தேறுதல்கூறி, அத் தண்டனையைத் தாங்கச் செய்கிறாள்.

அதுபோல எமதுபரலோக அன்னையும் எம்மை ஆதரிக்கிறாள். எமக்குவேண்டிய ஞானஉணவாகிய தேவவரங்கள் எமக்குக் கிடைக்கச் செய்கிறாள். சகலவரங்களினதும் ஊற்றாகிய யேசுவை அவளே நமக்குத் தந்தாளல்லோ!

எமக்குவரும் துன்பதுயரவேளையில் தஞ்சம் தேவதாயன்றோ! பாவத்துக்குத் தண்டனையாகத் துன்பதுயரங்களை நாம் அனுபவிக்கும்பொழுது எமது கண்ணீரைத் துடைத்து, கவலைகளைமாற்றுவது மாமரியன்றோ! எமக்காக யேசுவிடம் பரிந்துபேசும் மத்தியஸ்தி மரியாயன்றோ!

ஆகையால்தான் நாமெல்லோரும் இத்தாயை எமது தஞ்சம், தாபரம், சகாயம் என்று அழைத்து ஆனந்தங் கொள்ளுகிறோம்.

தேவதாயின் பிறந்ததினத்தைக் கொண்டாடும்போது எம்மைப்பெற்ற அன்னையையும் நாம் நினைவுகூருவது நியாயமல்லவா? எம்மைப்பெற்று வளர்க்க அவள் எவ்வளவு பாடுபட்டாள். இனிய உணவு கொடுப்பாள். தூயஉடை தருவாள். தன் ஒக்கலிற் சுமந்து செல்வாள். நாம் வருத்தப்படும்போது அவள் துயருக்கு அளவில்லை. அழும்பொழுது ஆறுதல் அம்மா. விழும்பொழுது ஊன்றுகோல் அம்மா. உலகமே எங்களை வெறுத்துத் துகளாக்கிவிடத் துடிக்கும்பொழுது "என்மகனே!" என்று உளங்கனிந்து உருகுபவள் அம்மா. நீங்கள் நன்னிலையில் இருந்தால் அந்த நிலைக்கு உங்களைக் கொணர்ந்து உயர்த்திவிட்டவள் அம்மாவன்றோ! அவளின் ஊக்கமும், செபமுமன்றோ!

இத்தகைய உபகாரிக்கு எமது பரலோகஅன்னை பிறந்தஇத் தினத்தை வருடத்தில் ஓர்தினமாக — நன்றிகாட்டும் நாளாக — "அம்மா தின" மாக அனுசரிப்போம். (பத்திரிகை கிடைக்கும் பொழுது இந்தநாள் நிறைவுபட்டாலும் அடுத்த ஞாயிற்றுக்கிழமையை அம்மாதினமாக அனுசரிக்கலாம்.)

அன்று அம்மாவைச் சற்றே இளைப்பாறச் செய்து வீட்டுவேலையைப் பிள்ளைகளாகிய நீங்கள் செய்யுங்கள். அப்பாவிடங் கேட்டு அம்மாவுக்கு விருப்பமான தொன்றை வாங்கி வெகுமதியாய்க் கொடுங்கள். நீங்கள் பாடசாலையில் கற்றுக்கொண்ட ஆடல்பாடல்களை அம்மாவின் முன்னிலையில் ஆடிப்பாடிக் காட்டுங்கள். அன்று தினம் அனைவரும் திவ்வியபூசை கண்டு திருவிருந்தருந்தி அம்மாவுக்காக ஒப்புக்கொடுப்பது பிரதானமுயற்சியாய் இருக்கட்டும். சுபம்!

உங்கள் அன்புள்ள
அண்ணா.

## பெந்தெக்கோஸ்துவின் பின் 15-ம் ஞாயிறு

**நிருபம், கலாத். 5 : 25, 26; 6 : 1–10**

சென்றவாரத்தின் தொடர்ச்சியே இன்று வாசிக்கப்படுவது.

கிறீஸ்துநாதருக்குச் சொந்தமானவர்கள் தங்களுடைய சீவியத்தில் ஒறுத்தலை அனுசரிக்கவேண்டுமென்று படிப்பித்த சின்னப்பர், ஞானச்சீவியத்தின் ஆன்மாவாகிய பரிசுத்தஆவியைக் கொண்டிருக்கிற நாம் அவருடைய ஏவுதலுக்கேற்கச் சீவிக்கவேண்டுமென்று படிப்பிக்கிறார்.

சரீர இச்சைகளை அடக்குவது அவசியம். ஆனால், புத்தியுடன் சம்பந்தப்பட்ட பாவங்களையும் மிகவும் சாக்கிரதையாய் விலக்கவேண்டும் ஏனெனில், அவைகளை எளிதில் அறியமுடியாது. அதிக கேட்டுக்கும் அவைகள் காரணமாகின்றன. தேவ வரங்களை அதிகம் அடைந்தவர்கள் ஆழ்ந்த தாழ்மையுடையோராய் இருக்கவேண்டும்.

மேலும் நமதுசகோதரரில் ஒருவன் குற்றஞ்செய்தால் ஞானமுள்ளவர்கள் அவனைத் திருத்தவேண்டும். பாவியாயிருந்தாலுஞ்சரி, வேதத்தை மறுதலித்தவனுகிலுஞ்சரி எவனுக்கும் அனுதாபங்காட்டித் திருத்தவேண்டுமென்று படிப்பிக்கிறார் அப்போஸ்தலர். அழித்துவிடாமல் அணைக்கவேண்டும்.

உபதேசமாக வேதசத்தியங்களைப் படிப்பிக்க வேண்டுமென்றதை நினைவூட்டி, உபதேசம் பண்ணுகிறவர்களுக்குச் சீவன் பொருளுதவியோ, பண உதவியோ செய்து அவர்களைத் தாபரிக்க வேண்டுமென்பது இந்த நிருபத்தில் வற்புறுத்தப்படுகிறது.

மனிதன் எதை விதைப்பானே அதையே அறுப்பான்என்று அப்போஸ்தலர் பொதுக் கொள்கையைக் கூறுவதுடன் அதன் விளக்கத்தையுங் கூறுகிறார். சரீர இச்சைகளுக்கு இடங்கொடுக்கிறவன் ஆத்தும அழிவைப் பலனுகப்பெறுவான். ஞான நன்மையைத் தேடுகிறவன் மோட்ச சம்பாவனையைப் பெறுவான். சுரை விதைத்துப் பாகற்காய் பிடுங்குவதில்லையே. ஆகையால், விதைக்கவேண்டியது என்ன? நன்மை! நன்மை செய்வதில் சோர்வுஇல்லாமல் உறுதியாய் நடக்கவேண்டும் என்றதற்கு நியாயம் மோட்சசம்பாவனை கிடைக்குமென்பதே. நன்மையில் கடைசிவரைக்கும் நிலைநிற்கிறவன் நித்தியசீவியம் பெறுவான்.

ஆகையால், நேரகால மிருக்குமளவும் — அதாவது இந்தச் சீவியத்திலே நன்மையைச செய்வோம். ஏனெனில், இரவென்னும் மரணம் வந்தபின் ஒருவனும் வேலைசெய்ய முடியாது.

"ஆங்காலம் புண்ணியத்தை
ஆசையுற்றுச் செய்யாமல்
சாங்காலஞ் செய்யவொரு
சாமார்த் தியமுளதோ
நன்று யிருக்கையிலே
நன்மைசெய்ய மாட்டாமல்
நின்றார் கிடந்தார்
நிலைநிற்பா ரார்எவரோ"

என்பதை நாம் நினைவிலிருத்தி இயன்ற நன்மையெல்லாஞ் செய்யக்கடவோம்.

— சர்வேசுரனுக்குத் தோத்திரம்

---

✲ உலகில் அதிகம் உயரமான சாதியினர் யார்?

பற்றக்கோனியரே. அவர்களிலே ஆடவரின் சராசரி உயரம் 6 அடி 1 அங்குலமாகும்.

✲ வடதுருவத்தையடுத்த கடல்களில்வாழும் "கறுப்பு மீன்" எனப்படும் மீனிலுள்ள விசேஷமென்ன?

அது பனிக்கட்டியில் முற்றாகஉறைந்துபோய் இருந்தாலும் உயிரோடிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாதோட்டத் தபால்

நாட்டுத்தூதன்

ஐயா! "கணவனே கண்கண்ட தெய்வம்" என்னும் ஓர் சினிமாப்படம் சமீபகாலமுதல் எமது நாட்டின் பலபாகங்களிலும் காண்பிக்கப்பட்டு வருகிறதாம். அதனைக் கண்டுகளிக்கப் பெருந்திரளான மக்கள் அஃது காண்பிக்கப்படும் சினிமாத்தலங்களை நோக்கிச் சரிந்துகொண்டிருக்கின்றனராம். ஆனால், இதிலும்மேலாக நமது கத்தோலிக்க தமிழ்மக்கள் அனைவரும் "சத்தியவேத பாதுகாவல"னைக் கண்கண்ட தெய்வமாக மதித்துநடந்தாலோ வென்றே தூதன் கருதுகின்றான். ஏனெனில், இலங்கைவாழ் கத்தோலிக்க தமிழ்மக்களுக்கு நம்முடைய கிறீஸ்துபெருமானின் புனித போதனைகள், சாதனைகளையும், தேவதாயாரினதும், மற்றும் அர்ச்சியசிட்டர்களினதும் பரிசுத்தமான சீவியவரலாறுகளையும், கத்தோலிக்கஉலகிலும், பொதுஉலகிலும் நிகழும் பல்வேறுசெய்திகளையும் அஃது சுருக்கமாகவும், விளக்கமாகவும் எடுத்துக்காட்டி வருகின்றது. ஆகவே, நமது சத்தியமறையின் காவலனும், வழிகாட்டியுமான "பாதுகாவல"னை அனைவரும் கண்கண்டதெய்வமாக மதித்து, வாரந்தோறும் அதனைத் தங்கள் இல்லங்களில் வரவழைத்துக் காதலாகமலங்களில் ஏந்திப்படித்து இன்புற்றுப் பேரின்ப வாழ்வுக்குரிய விஷயங்களை ரசித்துவர மேன்மேலும் முயல்வார்களாக!

**பொதுக்கூட்டம்:** மாந்தைதெற்கு – மாதோட்ட ஐக்கிய விளைபொருள் வியாபார விருத்திச்சங்க பொதுக்கூட்டம் சென்ற 17-8-55 புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் மன்னார்க் காரியாதிகாரி திரு. எஸ். சபாரட்ணம் அவர்கள் தலைமையிலே உயிலங்குளக் கிராமக்கோட்டுப் பங்களாவில்நடந்தேறியது. சுமார் இருநூறு அங்கத்தவர்கள் அதிலேகலந்துகொண்டார்கள். ஆரம்பத்திலே தலைவர் அவர்கள் தமது பேச்சிலே சங்கத்தின் ஆரம்பவரலாறு பற்றியும், இடைப்பட்ட காலத்திலே அதன் வீழ்ச்சிபற்றியும், இப்போது அதன் எழுச்சிபற்றியும் சுருக்கமாக எடுத்துக்கூறியபின் இவ்வருடப்பெரும்போக வேளாண்மையிலே அது ஏறக்குறைய 77 ஆயிரம் புசல்நெல் வசூலித்து அரசாங்கத்துக்குவிற்று 9 லட்சம்ரூபா பெற்றிருக்கிறதென்றும், 38ஆயிரம்ரூபா ஆதாயங் கண்டிருக்கிறதென்றும், இந்தஆதாயப்பணம்பெரும்பாலும் அங்கத்தவர்களுக்கே கடனாகக் கொடுபட்டிருக்கிறதென்றும் தெரிவிக்கப்பட்டது. பின்னர் காரியதரிசியின் வருடாந்தஅறிக்கை வாசிக்கப்பட்டது. ஈற்றில் சங்க நிர்வாகசபைத் தெரிவும், ஏனையஉத்தியோகஸ்தர் தெரிவும் இம்மாதக் கடைசிச்சனிக்கிழமை கூட்டப்படும் பொதுக்கூட்டத்திலே நடத்தப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுக் கூட்டம் நிறைவாயிற்று.

**மரிகிரிதாள் நாடகம்:** இப்பெயர் தாங்கிய அர்ச்சியசிட்டவளின் பழைய நாடகம்ஒன்று சிலபுதிய பாகங்களை ஆங்காங்கே புகுத்தித் திருத்திச் சமீபத்தில் நானாட்டான் விசாரணைப்பங்கைச்சேர்ந்த காத்தான்குளக் கத்தோலிக்கமக்களால் மிகவும் விமரிசையாக நடித்துக் காட்டப்பட்டது. இதிலே அர்ச். மரிகிரிதாள் தனதுகற்பைக் காப்பாற்றுவதற்காகப் பட்ட சொல்லருங் கஷ்டங்களும், அவளின் புனிதசீவிய மாதிரிகையினால் பிறசமயஅரசன் சத்தியவேதமறையில் சேர்ந்துகொண்ட விபரங்களும் சுருக்கமாக நடித்துக் காட்டப்பட்டன.

**புதிய நவரத்தினம் சுவாமியார்:** சமீபத்திலே குருத்துவாபிஷேகம் செய்யப்பெற்றுச் சென்ற 27-8-55 சனிவாரம் பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிலே யாழ்ப்பாணத்தில் முதன்முறையாகத் திவ்வியபூசை நிறைவேற்றிய வண. எவ். யோசெவ் நவரத்தினம் சுவாமியவர்கள் இளமையிலே வசித்திருந்த இல்லத்தின் அண்மையில் தூதன் சிலவருடகாலம் சஞ்சரிக்கும் அதிர்ஷ்டம் கிடைத்ததாம். அதனால் அவரின் அபிஷேக திருக்காஆசி சென்ற 28-ந்திகதியன்று தனக்கும் கிடைத்தமையையிட்டு அவன் ஞானானந்தம் கொள்ளுகின்றானும். "விளையும் பயிரை முளையில்தெரியும்" என்பதுபோல் இப்புதிய குருவரின் இளமைச்சீவியமே பிற்கால குருத்துவ சீவியத்துக்கு முன்னோடியாக விளங்கியதெனில மிகையாகாது.

**பணமா? மணமா? பாவமா?** அன்று ஓர் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் ஓர் காலங்கண்ட மனிதர் கோவில்சென்று திவ்விய பூசை கண்டுகொண்டு வீட்டுக்குத் திரும்பும்போது வழியிலே ஓர் இளம்வாலிபன் கையில் அரிவாளுடன் வேலைசெய்து வியர்த்துக்களைத்தமுகத்துடன் எதிரே வரக்கண்டு, அவனை ஏறெடுத்து நோக்கி: என்ன் தம்பி, நீ ஓர் கத்தோலிக்கனாயிருந்தும் கடன்பூசை காணவேண்டிய இன்று பெருங்கஷ்டப்பட்டு வேலை செய்தலவது சரியா? இதுசெயல் நமது திருச்சபையின் முதலாம்கட்டளைக்கு மாறாயிருக்கிறதே யென்று மனம்நொந்து கூறினராம். இதைக் கேட்ட அந்தவாலிபன்: என்ன அப்பா, நான் தனித்தவன்; எனக்குப்பெற்றோராவது, மற்றும்இனசனராவது கிடையாது; இம்மாதத்திலே எனக்குக்கலியாணமும் ஒழுங்காயிருக்கிறது; ஆகவே, கைவசம்ஏதாவது பணம் வைத்திருந்தால்தானே கலியாணஞ்செய்துகொண்டு ஒருவிதமாகக் காலந்தள்ளலாமென்று வியர்க்கவியர்க்கக் கூறிநின்றானும். அதற்கு அப்பெரியார், தம்பி, கடவுளைக் கடைக்கணித்தும், திருச்சபையின் கற்பனையைப் புறக்கணித்தும் சம்பாதிக்கும்பணம் உள்ளபடியேபணமல்ல, பெரும் பாவமேயென மறுமொழிகூறிவிட்டு ஊன்றியகோலுடன் வழிநடந்தாராம்.

## புத்தி தெளிந்தான்



நெடுந்தூரம் நடந்திளைத்த வழிப்போக்கன் ஒருவன்
நிழல்படர்ந்த ஆலமரத் தடியினில்வந் திருந்தான்
கடுங்கோடைக் காலமது இளந்தென்றல் வீசக்
கற்பனைகள் அவனுளத்தில் உற்பவஞ் செய்தனவே.

●

எண்ணரிய பறவைகளும் விலங்குகளும் நாடும்
இப்பெரிய தருவினுக்கு ஏன் சிறியகனிகள்?
கண்ணிலையோ கடவுளுக்குப் பெரியபழம் படைத்தால்
கடும்பசியும் நீங்கிடுமே அழகுந்தரு மன்றோ!

●

எண்ணமெலாம் இவ்வாறாய் எழுந்துஅவ னுளத்தில்
ஏளனஞ்செய் தேசிரித்தான் ஈசனது படைப்பைக்
கண்ணயர்ந்தான் சிறுதென்றற் காற்றசைய அவன்தன்
கண்புருவ மீதினிலோர் பழம்வீழ்ந்த தப்போ.

●

புத்தியற்ற வழிப்போக்கன் துடிதுடித்து எழுந்தான்
புருவமதில் வீழ்ந்தசிறு பழந்தன்னை எடுத்தான்
பித்தனைப்போல் ஏசினனே பெரும்பழமாய் இருந்தால்
பிழைத்திருக்க மாட்டேனே என்றுஉள்ளந் தெளிந்தான்.

"ஜெயம்"

## தமிழ் மொழியின் ஒலிமாட்சி

(சொல்லின்செல்வன் பேராசிரியர் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் அண்மையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலுள்ள சாஸ்திரி மண்டபத்தில் "தமிழின் ஒலிமாட்சி" எனும் பொருள்பற்றி நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.)

தமிழ்மொழியின் சிறப்பொலிகளாகிய "ழ" காரத்தையும், "ற" காரத்தையும் குறித்துச் சிறிது சொல்லலாமென்று எண்ணுகிறேன். பழங்காலத்தில் இவ்விரண்டொலிகளும் திராவிட மொழிகளுக்கெல்லாம் உரிய சிறப்பொலிகளாயிருந்தன. இப்பொழுது கன்னடமும், தெலுங்கும் இவற்றைஇழந்துவிட்டன. தமிழிலும் இவ்வொலி செப்பமாக வழங்குவதில்லை. சிலசொற்களில் அமைந்த "ழ" கரம் பேச்சுத்தமிழில் உச்சரிக்கப்படுவதேயில்லை. உதாரணமாக, "எழுந்திரு" என்பதை "எந்திரு" என்கிறோம். "யாழ்ப்பாணம்," "யாழ்ப்பனம்" ஆகி, "ஜாப்பனம்" ஆகி, "ஜாப்னா" என்று ஆங்கிலத்தில் வழங்குகின்றது.

### "ழ" கரத்தின் சிறப்பு

பாண்டியநாட்டிலே பொது "ள" காரத்திற்கும், சிறப்பு "ழ" காரத்திற்கும் பேச்சுநடையில் வேற்றுமை செய்யப்படுவதில்லை. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் எல்லையில்அமைந்த தில்லையம்பதியில் "ழ" கரம் "ஷ" காரமாகின்றது. மார்கழித்திருவிழாவை, "மார்கழித்திருவிஷா" என்றுசொல்வதைச் சிதம்பரத்திலே கேட்கலாம். சென்னைமாநகரில் சிறப்பொலியாகிய "ழ" கரம் "ய" காரமாகும். "வாழைப்பழம்" என்பது, "வாயப்பயம்" என்றும், "கிழவி" "கியவி" என்றும் பொதுமக்கள் பேசுவர். திருவள்ளுவர், இளங்கோவடிகள், நக்கீரர்முதலிய பெரும்புலவர்கள் "ழ" கரத்தின் சிறப்பினைஅறிந்து அதனைப் பொன்போற்போற்றித் தம்கவிதைகளை அழகு செய்துள்ளார்கள். அன்னார்போற்றிய ஒலியைச் சிதைத்தல் தமிழ்நாட்டார்க்கு அழகன்று. அவ்வொலியால் அடைவதற்குரிய சிறந்தஇன்பத்தைத் தமிழ்நாடு இழந்துவிடுதல் ஆகாது. தமிழ் மாணவர்கள் "ழ" கரத்தைச் செவ்வையாகஉச்சரித்து நாடெங்கும் அச்சிறப்பொலியைப் பரப்புதல்வேண்டும்.

வல்லினம்என்று சொல்லப்படுகின்ற "ற" கரம் தமிழ் இலக்கியங்களில் ஆளப்பட்டுள்ள அழகினைக்காண்பது ஒருசிறந்த இன்பமாகும். வன்மையான உணர்ச்சிகள் உள்ளத்திலே தோன்றும்போது இவ்வெழுத்தை நல்லாசிரியர்கள் எடுத்து ஆளுவார்கள். சிலப்பதிகார ஆசிரியராகிய இளங்கோ அடிகள், கண்ணகி சீற்றம்கொண்டு பாண்டியன் அரண்மனைக்குச் சென்று பேசுகின்றசொற்களில் "ற" கரத்தின் ஆற்றலைக் காட்டியுள்ளனர்.

"அறிவுஅறைபோகிய பொறிஅறு நெஞ்சத்து, இறைமுறைபிழைத்தேன். வாயிலோயே" என்று வாசல்காத்து நின்ற சேவகனைநோக்கிக் கூறும்வாசகத்தில் ஆறு "ற" கரம் அமைந்து அவள்உள்ளத்தின் வேகத்தை உணர்த்துகின்றது. இத்தகைய வல்லின "ற" கரம் இரட்டித்துவரும்போது, பெரும்பாலும் சிதைந்துவழங்குவதைப் பேச்சுத்தமிழிலே காணலாம். "காற்று" "நாற்று" என்பன "காத்து" "நாத்து" என்றே பேசப்படும். கும்பகோணத்திற்கு அருகேயுள்ள "சத்திமுற்றம்" என்ற ஊர்ப்பெயர் "சத்திமுத்தம்" என்று சிதைந்தது. தமிழ்நாட்டின் வடபாகத்தில் "ற" கரம் "ட" கரமாகும். "பற்று" என்னும் சொல் வயலைக்குறிக்கும். கோயில் நிலங்கள் உள்ளஊர் "கோயில்பற்று" என்று பலமாவட்டங்களில் வழங்கப்பெறுகின்றது.

### இக்காலப் பிழைகள்

செங்கல்பட்டுஎன்ற ஊர்ப்பெயர் "செங்கழுநீர் பற்று" என்ற அருமையானசொல்லின் சிதைவுஆகும். "செங்கழுநீர்" இல் உள்ள "ழ" கரம நழுவிற்று. "செங்கநீர்" ஆயிற்று. "பற்று" என்பது "பட்டு" என்று மாறிற்று. ஆகவே, "செங்கநீர்ப்பட்டு" என்பது "செங்கற்பட்டு" என முடிந்தது. இக்காலத்திலுள்ளவர்கள் செங்கற்சூளை அதிகமாகக் காணப்பட்டமையால் அவ்விடம் அப்பெயர் பெற்றதுஎன்று எண்ணுகிறார்கள். அரசாங்கத்தின் ஆதரவில் எழுதப்பட்ட குறிப்புகளிலும் இப்பிழைபுகுந்துவிட்டது.

## புதிய பாடசாலைக்கு அத்திபாரக்கல்

முல்லைத்தீவிற்கு அண்மையிலே சுமார் ஏழுமைல் தூரத்திலுள்ளது, அளம்பில்என்னும் சிறுகிராமம். இந்தக்கிராமம் அர்ச். அந்தோனியாரைத் தன்பாதுகாவலராகக் கொண்டுள்ளது. அழகிய தென்னஞ்சோலைகள் மத்தியில் எழில்மிகு குளக்கரைகளையுடைய இக்கிராமத்தில் பலஆண்டுகளுக்குமுன்னரே அரசினரால் பதிவுசெய்யப்பெற்ற கத்தோலிக்கபாடசாலை ஒன்றுஉள்ளது. இப்பாடசாலை மிகவும்பழமையானது அதனால், பொதுமக்கள் விண்ணப்பஞ் செய்துகொண்டதின்பேரிலே நம்மேற்றிராணியாண்டவரின் விருப்பத்திற்கிசைந்து வண. எஸ். ஏ. ஞானப்பிரகாசம் சுவாமியவர்களால் சென்ற 3-9-55 சனிக்கிழமை காலை 10-30 மணிக்கு ஓர்புதிய பாடசாலைக்கட்டடத்துக்கு அத்திபாரக்கல் நாட்டப்படலாயிற்று. அத்தருணம் கிராமமக்கள்யாவரும் சமுகந்தந்து குருவர்அவர்கள் அத்திபாரக்கல் ஆசீர்வதித்து நாட்டும்போது வேண்டுதல் செய்தும், காகோஷஞ்செய்தும் ஆர்ப்பரித்துநின்றனர். கட்டளைக்குருவருக்கு ஆசிரியரும், மாணவர்களும் தங்கள்நன்றியைத் தெரிவித்துநின்றனர்.

— நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளு சங்கதிகள்

● பிரான்சின் தலையாரியான கம்யூனிஸ்தர் மோறிஸ் தோரெஸ்என்பவர், அத்தேசத்தின் பேரான சுகதலமாகிய றிவியேறுவிலே அவர் வசிப்பதற்கென்று ஆடம்பர வாழ்க்கைக்குரிய மனை ஒன்றிற்கெனப் பிரான்சிய கம்யூனிஸ்தக்கட்சி தொழிலாளர்வகுப்பு நிதியிலிருந்து 90,000 டலர் எடுத்துச் செலவிட்டிருக்கிறது.

● ஜப்பானிய குருடர்களுக்கென்று அர்ச். மத்தேயுசுவிசேஷம் பிறெய்லி எழுத்துமுறையிலே பெயர்த்தெழுதப்பட்டிருக்கிறது. ஏனைய்சுவிசேஷங்களும் இவ்வருடமுடிவிற்குள் அதே மாதிரியாகப் பெயர்த்தெழுதப் பட்டுவிடுமென நம்பப்படுகிறது.

● கம்யூனிஸ்தபோலாந்திலே சென்ற ஆனிமாதத்தில் நூற்றுக்கணக்கான குருமார் அபிஷேகஞ்செய்யப் பெற்றிருப்பதாகச் செய்திகிடைத்திருக்கிறது. அவர்களிலே 46குருத்துவமாணவர்களைக்கொண்ட முதற்குழுவானது அங்கு ஏபோல் மாகாணத்திலுள்ள நீசா நகர குருமடத்தைச் சேர்ந்ததாகும்.

● சமரேகைஸயயடுத்த கடல்களில் 'பறுக்குடா' என்ற ஓர்விதநூதனமீன் இருந்துவருகிறது. அதிலே சிலவேளைகளில் வரிகள்காணப்படும். சிலவேளைகளில் அவைகள் மறைந்துபோய்விடும். அந்தமீன் பசியாயிருக்கும்போது மாத்திரம் வரிகள்காணப்படும். மற்றப்படி அவைகள் மறைந்துவிடும்.

● இமயமலையிலும், அல்ப்ஸ், அந்தீஸ்முதலாம் மலைகளிலும், வடதுருவ, தென்துருவப் பகுதிகளிலும் இருந்து வருகின்ற உறைபனிப் படலங்களெல்லாம் உருகுமானுல் கடல்மட்டம் 65 முதல் 165 அடி உயரத்துக்கு எழுந்து, அதனுல் தற்போதிருக்கும் தரைப்பாகத்தில் பாதிக்குமேல் கடலில்மூழ்கி மறைந்துவிடுமென்று கணிக்கப்படுகிறது.

● தேவதாயரின் மோட்சாரோபண திருநாளாகியசென்ற ஆவணி15-ந்திகதியன்று உருமத்தின்போது பாப்பரசர் திருந்தாதிச்செபஞ் செய்தபோது லட்சக்கணக்கான மக்கள் அவருடன் சேர்ந்து செபிக்கக்கூடியோ ராஞர்கள். அதற்குக் காரணம் காஸ்தெல் காண்டல்போவிலுள்ள அவரது சிற்றாலயத்திலிருந்து அவருடையசெபம் இத்தாலிய, வத்திக்கான் வாஞெலிநிலையங்களிலிருந்து ஒலிபரப்பப் பட்டமையேயாகும்.

● அயர்லாந்துதேசம் அங்குள்ள ஒவ்வோர் 65கத்தோலிக்கருக்கும் ஓர் குருவானவரைக் கொண்டிருக்கிறது. கத்தோலிக்கஉலகில் இதுதான் அதிகம்உயர்ந்த விகிதமாகும். பிரித்தானியதேசத்திலே ஒவ்வொரு 530 கத்தோலிக்கருக்கும் ஒரு குருவானவர் வீதம் இருந்துவருகிளுர். இவ்வாறு 'பரீஸ் மச்' எனும் பிரான்சிய வாரச்சஞ்சிகை புள்ளிவிபரம் வெளியிட்டிருக்கின்றது.

● ஐக்கிய அமெரிக்கதேச நியூயோக்மாகாண சுப்பிறீங்கோட்டின் முதலாவது காப்பிரி நீதியரசராகத் திரு. ஹறோல்ட் ஸ்ரிவென்ஸ் எனும் கத்தோலிக்கர் நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்ருர். இவர் புறெட்டஸ்தாந்த சமயத்திலிருந்து மனந்திரும்பியவர். இவர் தந்தையார் மெதடிஸ்ற் புறெட்டஸ்தாந்தசபையில் ஓர் பாதிரியாராவர்.

● தனது சரித்திரத்திலே முதன்முறையாகப் பிலிப்பைன்ஸ் பாராளுமன்றம் செபத்துடன் தனதுகூட்டத்தை ஆரம்பிக்கலாயிற்று. மனிலாநகர் உதவிமேற்றிராணியாராகிய மகாவந். ஹேயேஸ் ஆண்டவர் செனற்சபை விசேஷ கூட்டத்தின் ஆரம்பத்திலே செபத்தைச் சொன்ஞர். சனப்பிரதிநிதிகள் சபையின் விசேஷ கூட்டம் ஒருநிமிஷ மவுனசெபத்துடன் ஆரம்பமாயிற்று.

## பாடசாலைத் திறப்புவிழா

முல்லைத்தீவிலிருந்து சுமார் 24மைல் தூரத்திலுள்ள கொக்கிளாய் எனும் கிராமத்திலுள்ள பரிசுத்த தேவதாயாரது கோவிலின்பக்கமாக ஏறக்குறைய ஒன்றரைவருடமாக நடாத்தப்பட்டுவந்த கத்தோலிக்கபாடசாலை மகாவந். மேற்றிராணியாண்டவரின்விருப்பப்படி முல்லைத்தீவுக் கட்டளைக்குரவர் வண. எஸ். ஏ. ஞானப்பிரகாசம் சுவாமியவர்களால் புதியஇடத்தில் புதிதாய் அமைக்கப்பெற்றுச் சென்ற 1-9-55 வியாழக்கிழமைகாலை 10 மணிக்குத் திறந்துவைக்கப்படலாயிற்று. அத்தருணம் பலபெரியார்கள் பிரசன்னமாயிருந்தனர். இப்பாடசாலையிலே புதிய கல்வித்திட்டப்படி தமிழ், ஆங்கிலம், சிங்களம்ஆகிய மும்பாஷைகளையும் கற்பிக்கும்ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். 62 பிள்ளைகளைக்கொண்ட இப்பாடசாலை கல்வி, சமயம் எல்லாவற்றிலும் மாணவசிறுர் முன்னேறப் போதிய அளவு சேவைசெய்யுமெனவும், பெற்ரேர் தங்கள்பிள்ளைகளின்கல்வியிலே — விசேஷமாக வேதக்கடமைகளிலே பிரமாணிக்கம்காட்டுவதால் மற்றப்பாடசாலைகளுக்கு ஓர் முன்மாதிரியாக இருந்துவரவேண்டுமெனவும் அவ்வேளை சுவாமியார் குறிப்பிட்டுப் பிள்ளைகளுக்கு வெகுமதிகள் வழங்கிஞர். இப்பாடசாலை சென்மேரீஸ் எனும்நாமத்தைக்கொண்டதென்பதும் ஈண்டுகுறிப்பிடத்தக்கது.

— நிருபர்

## கல்லாற்றுத் தபால்

அர்ச். மரியகோறெற்றியின் திருச்சுருபம்—கல்லாற்று, அர்ச். அருளானந்தர் ஆலயத்தின் பத்திச்சபைகளில்ஒன்ருகிய கன்னியர்களின் அர்ச். மரியகொறெற்றிஅம்மாள் பத்திச்சபை உண்டாகி இப்போது சிலஆண்டுகள் கழிந்துவிட்டன. ஆயினும், அவர்கள் மரியகொறெற்றிஅம்மாளின் திருச்சுருபமஒன்று கிடையாமல் இதுவரை அவளின் படமொன்றையே வைத்து வணங்கிவந்தனர். இந்தக்குறையைப் போக்குகிறவராய் இன்றைய பங்குக்குரவர் அர்ச். மரியகொறெற்றியின் அழகிய திருச்சுருபம்ஒன்றைச் சென்ற கிழமை மிகுந்தஆடம்பரத்துடன் ஸ்தாபித்துவைத்தார். அவ்வேளை பத்திச்சபைக்கன்னியர்களும், மற்றும்பலரும் சமூகமளித்திருந்தனர்.

பாடசாலையும் பங்குக்குரவரும் — கல்லாற்று, அர்ச். அருளானந்தர் பங்கைச்சேர்ந்த மரியநாயகியின் பாடசாலைக்கட்டடம் முற்றுப்பெருமல் கடந்தபலவருடங்களாகக் குறைவேலையாய் இருந்துவந்தது. அதை முற்றுக்கட்டிமுடிக்க வேண்டுமென்று கருதிப பங்குச்சுவாமியார் தமது சரீரப் பிரயாசையையும் பொருட்படுத்தாது தாமே உடன்நின்று உதவிசெய்து காண்போர்மனதைக் கவரத்தகும் அழகிய ஓர்கட்டடமாக அதனை முற்றுப்பெற வைத்திருக்கிருர். மேலும் பாடசாலைக்கு மாணவர்கள்வரத் தவறிவிட்டால் ஆசிரியர்களுக்குப் பதிலாக அவரே வீடுவீடாகச்சென்று மாணவர்களைப் பாடசாலைக்கு அழைத்துவருகின்ருர். மாணவர்கள் கல்வியிலே முன்னேற வேண்டும்என ஆசித்து, இரவு 6 மணிதொடக்கம் 7-30 மணிவரை பாடசாலையில் விளக்கேற்றி மாணவர்களை அழைப்பித்துக் கற்கும்படி செய்து உடன்இருந்து மேற்பார்வையிட்டும வருகிருர். வாழ்க அவர்தொண்டு!

அர்ச். அந்தோனியார் சுருபம் — கல்லாற்று, அர்ச். அருளானந்தரின் கோவிலில் இருந்துவந்த அர்ச். அந்தோனியாரின் சிறியசுருபம் இற்றைக்குச்சிலநாட்களின்முன் சேதமடைந்துவிட்டது. அதனுல் சுருபம் இல்லாமல் ஒருபடம் வைக்கப்பட்டது. இப்போது பங்குக்குரவர் அர்ச். அந்தோனியாரின் ஓர் அழகிய பெரியதிருச்சுருபத்தை 1-9-55 வியாழக்கிழமை மிக ஆடம்பரத்துடன ஸ்தாபித்துவைத்தார்.

தேவநற்கருணைச் சுற்றுப்பிரகாரம்— கல்லாற்று, அர்ச். அருளானந்தர்கோயிலில் இமமாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை 4-9-55 காலை இரண்டாமபூசையின்பின் தேவநற்கருணை எழுந்தேற்றயபண்ணிப் பகல்முழுவதும் பக்தர்களினவழிபாட்டுக்கு வைக்கப்பட்டிருந்தது. அவர்களும் கும்பல்கும்பலாகவந்து நற்கருணைநாதரைப் பபபக்தியுடன் வழிபட்டனர். பிற்பகல் 5 மணிக்கு மலர்மாரிசொரிய, கீதங்கள்இசைக்க, மக்கள் பந்திபந்தியாய்ச் செல்ல, அலங்கரிக்கப்பட்ட கோயில்வீதிவழியாகக் கோயிலைச்சுற்றித் திவ்வியநற்கருணை சுற்றுப்பிரகாரமாகக் கொண்டுசெல்லப்பட்டது. அன்று தேவநற்கருணை எழுந்தேற்றம் பண்ணி வைக்கப்பட்டிருந்த பீடமானது வெண்மலர்களாலும், பச்சைப் பசேல்என்ற பாம்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பீடத்தை அழகுற உருப்படுத்திய உபதேசியாருக்குக் கல்லாற்றுக் கத்தோலிக்கரின் நன்றி உரித்தாகுக.

— நிருபர்

## வரவேற்பு விழா

சென்ற 3-9-55 சனிவாரம் அர்ச். ஞானப்பிரகாசியார் கூட்டத்துக்கு ஓர் குதூகலமிக்க நாளாகும். ஏனெனில், அன்றுதினமே எமது கூட்டத்தின் புதியஅங்கத்தவர்களான வண. எவ். ஜே. நவரத்தினம, வண. ஜே. பிரான்சீஸ் சேவியர் எனும் புதியகுரவர்கள் இருவரையும் தற்போதைய அங்கத்தவர்கள் மங்கலகரமாக வரவேற்றுஉபசரித்து மகிழ்ச்சியைத்தெரிவித்த சுபநாளாகும். அன்றுகாலை புதியகுரவர்கள் இருவரும் அழகுறச் சிங்காரிக்கப்பட்டிருந்த எமதுகூட்டச் சிற்றாலயத்தில் 6 மணிக்கும், 6-30 மணிக்கும் முறையே திவ்வியபூசைப்பலி நிறைவேற்றினர். அவ்வேளை அங்கத்தவர்கள் ஞானகீதங்கள்பாடி ஆண்டவரைத் தோத்திரித்தார்கள். பூசையின்பின் கூட்டச்சாலையிலே குரவர்கள் இருவரையும்அன்பாகவரவேற்று மோ. தார்சீசியஸ் ஆற்றிய சொற்பொழிவிலே: "அன்று எம்மைப்போல் பலகுருமாருக்குப் பூசைக்கு உதவியவர்களுக்கு இன்றுநாம பூசைக்குஉதவி ஆனந்தமகொள்வது எம்பெரும் பாக்கியமே" எனக்கூறிஞர். பின் தலைவர்சுவாமியார் வண. மிக்கேல்சாமி அவர்கள் பேசியபோது: புதியகுரவர்கள் தங்கள்பூசையிலே எமதுகூட்டத்தையும் நினைவுகூரவேண்டுமெனக்கேட்டு, இன்னும்பலர் இக்கூட்டத்திலிருந்து குருத்துவபதவியைத் தெரிந்துகொள்ள மன்ருடும்படி வேண்டிஞர். புதியகுரவர்களுக்குக் கூட்டஅங்கத்தவர்களான ஜே. வேதநாயகம, வி. ஆர். பி ஜெகஞானேந்திரன் என்பவர்களால் கூட்டத்தின் சார்பாக அன்பளிப்புகள் வழங்கப்படலாயின அதன்மேல் இருகுரவர்களும் தங்கள்நன்றியைத்தெரிவித்து, நன்மதிகள் கூறிஞர்கள். பின்பு யாவருக்கும் காலைபபோசனம் வழங்கப்பட்டு, உபதலைவர் ஆர். பிரான்சீஸ் கூறிய நன்றியுரையுடன் வரவேற்பு விழா இனிதேமுடிவுற்றது.

— நிருபர்

**மலை இடம்மாறி விட்டதென்பதைக்கூட நம்பிவிடலாம். ஆனுல், மனிதன் குணம் மாறிவிட்டானென்பதை இலகுவில் நம்பிவிட முடியாது.**

## GOVT. TENDERS

JAFFNA KACHCHERI

N2554—Tenders will be received by the G. A., Jaffna up to 12 noon on 23-9-55 for toll rent—Karaitivu-Kayts ferry service—1955/57. For particulars see Part I, Section II, Govt. Gazette 9-9-55.

## THE JAFFNA DIOCESAN UNION

A meeting of the Executive Committee of The Jaffna Diocesan Union will be held on Sunday the 18th September, 1955 after Benediction at 5 p.m. at the Catholic Club.

**AGENDA:**

1. To submit the Revised Rules of the J.D.P.S. as approved by the Registrar-General.
2. To consider the report on the Provident Society Loan Fund.
3. Any other business.

**A. Lazarus,**
Hony. Secretary,
J.D.U.

3-9-55.

## விற்பனைக்கு!

### செபச் செண்டு

—*—

| | ரூ. ச. |
|---|---|
| ● பைபிள் கடதாசி கலிக்கோக் கட்டு | 1—10 |
| ● சாதாரண கடதாசி கலிக்கோக் கட்டு | 1—00 |
| ● சாதாரண மட்டைக் கட்டு | 0—75 |

* * *

### அப்போஸ்தலருடைய நடபடிகள்

—*—

● புதிய பதிப்பு: 1—00

கிடைக்குமிடம்: மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

அற்புதவரத்தரான அர்ச். அந்தோனியாரிடமிருந்து நான் இரந்துகேட்டமன்றுட்டு அடையப்பெற்றேன். நேர்த்தியின்படிஇதைப் பூர்த்திசெய்கிறேன்.

யாழ்ப்பாணம் A. R.

* * *

பரிசுத்த் சதாசகாய (மருதமடு) மாதாவிடம் நான் இரந்து வேண்டிக்கொண்ட சகாயங்களை அவர் அனுக்கிரகித்தருளியதற்கு நன்றியறிந்த ஸ்தோத்திரமாக இதைப் பிரசுரிக்கிறேன். அவருடைய பரிசுத்தநாமம் என்றென்றும எங்கும் போற்றப்படுவதாக.

ஊர்காவற்றுறை ச. வி.

* * *

நான் பரிசுத்த சதாசகாயமாதா, அர்ச் சூசையப்பர், அர்ச். பத்தாம்பத்திநாதர் மூலமாகக் கேட்டமன்றுட்டுச் சித்தியானது. நேர்த்திப்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

வங்காலை ஆ. பிரான்சீஸ் கூஞ்ஞை.

* * *

கேட்கும் மன்றுட்டுகளையெல்லாம் பெற்றுத்தரும் அர்ச். தெரேசம்மாளிடம் யான் கேட்டுக்கொண்டபடி பெற்றுக்கொண்டேன். அவவுடைய நாமத்துக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக!

M. B.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, September 8-1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org